பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

௨

விரோதிஸு (1889) ஆவணிமீ ௨௰௨ ஆரம்பமானது

பத்திராக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ 5·00 |
| இங்கிலீசும் தமிழும் | 9·00 |
| இலங்கை இந்தியா | ரூ 8·00 |
| இங்கிலீசும் தமிழும் | 12·00 |
| சோவேர்ப்பகுதி | ரூ 9·00 |
| இங்கிலீசும் தமிழும் | 13·00 |

முற்பண மனுப்பிறு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

விளம்பரவிகிதம்.

முதன் முறைக்கு:

| | |
|---|---|
| ,, ஒருதரம் ரூபா | 10·00 |
| ,, அரைக்கலம் ,, | 5·50 |
| ,, காற்கலம் ,, | 4·00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பிறு லன்றிக் கவனிக்கப்படா.

"எவனைத்தானு நல்லவை கேட்க அவனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிராவணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்களோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்கணிங்கப் பரம்பூத்த சைவநிலைபாரோர் தாங்கப், பேர்பூத்த வெணக்கத் தினிறு தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த, வார்பூத்த வறிவிச்சை தோற்றிலென் றேத மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சடு } யாழ்ப்பாணம்:— ஸ்ரீமுகஸு பங்குனிமீ ௨௨; ( 1934 மார்ஜ் 15 ) வியாழக்கிழமை. { இலக்கம்—௯௨.



## கந்தரலங்காரம்.

சுழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

இ—ள்: நெஞ்சே - மனமே; செல்வம் சுழித்து ஓடும் ஆற்றின் பெருக்கானது - செல்வமானது சுழித்துக் கொண்டு (வேகமாகப்) பாயும் நதியின் பெருக்கை நிகர்த்தது; துன்பம் இன்பம் கழித்து ஓடுகின்றது எக்காலம் - அந்தச் செல்வம் அடைதல் நீங்குதலால் (முறையே) உண்டாகும் சுக துக்கங்களை விட்டு நீங்குவது எந்தக் காலத்தில்; கரிக்கோட்டு முத்தைக் கொழித்து ஓடு காவிரிச் செங்கோடன் என்கிலை - (அங்ஙனம் நீங்கும் பொருட்டு) யானைக்கொம்பிற் பிறந்த முத்துக்களை வாரிக்கொண்டு பாயும் காவிரியாற்றங் கரையிலுள்ள திருச்செங்கோட்டில் எழுந்தருளிய பெருமான் என்று சொல்லுகின்றிலை; குன்றம் எட்டும் கிழித்து ஓடும் வேல் என்கிலை - மலைகள் எட்டினையும் ஊடறுத்துச் செல்லும் வேலாயுதமே என்று சொல்லுகின்றிலை; முத்தி கிட்டுவது எங்ஙன் - (இப்படியாயின்) நாம் மோட்சத்தை அடைவது எப்படி எ—று.

பெருமழை பெய்து வெள்ளப்பெருக்கு அதிகப்படுங் காலத்து நதியானது சுழியிட்டு ஓடுதலும் அம்மழையில்லாக்கால் சுழியின்றி யோடுதலும் இயல்பாதல்போல, செல்வமும் புண்ணியமுள்ள சமயத்தில் வந்து அஃதில்லாதவழிக் குன்றியும் கெழுமென்பார் "சுழித்தோடுமாற்றிற் பெருக்கானது செல்வம்" என்றார். "ஆறிடு மேடும் மடுவும் போலாஞ் செல்வம்" எனவும் "நிறைசெல்வம், நீர்ச் சுருட்டு நெடுந்திரைகள்" எனவும் செல்வம் நிலையாமையை யிட்டுப் பிறர் காட்டிய உவமானத்தையும் நோக்குக. அரிதாகிய அறவற நெறியில் ஒழுக முடியாத நீ முருகன் திருநாமங்களை யேனும் உச்சரித்து ஈடேற முயல் கின்றிலையே என மனத்தை விளித்துக் கூறினரென்க. பெருக்கு, ஆகுபெயர்; குன்றமெட்டும் என்றது எட்டுத்திக்கிலுமுள்ள மலைகளையாம். எங்ஙனே என்பதில் ஏ இசை நிறை. இது வீட்டையடைதற்கு உபாயங் கூறியவாறும்.

மனமே, இல்லறவாழ்க்கையில் அல்லலுண்டென்பதனையுன்னி அதனை விடுத்துத் துறவறநிலையைக் கைக்கொள்கின்றிலை; இல்லறத்திற்றானே இருந்துகொண்டு குகன்நாமங்களைச் சொல்லுகின்றிலை; இங்ஙனம் செய்யாதொழியின் நீ முத்தியடைதல் அரிது எனச் சுவாமிகள் தமது உள்ளத்தை விளித்துக் கூறியபடி.

(௱௬௩.)

---

### மன்னன்மகனும் பாமரஸ்திரியும்.

ஸ்வீடன் தேசத்து மன்னரின் பௌத்திரனும் இளவரசரின் மகனுமாகிய சிக்வார்ட் என்பவர், எரிக்கா பாற்லெக் என்னும் ஜெர்மனிய பயஸ்கோப் நடிகையைச் சென்ற செவ்வாய்க்கிழமை மணமுடித்தார். இந்த விவாகம் நிறைவேறுமானல், சிக்வார்ட் இளவரசர் தமது அரசுரிமைகள் யாவற்றையும் இழக்க நேரிடும் என்று மன்னனும்மகனும் கண்டிப்பாக முன்னரே கூறத்தாவிட்டனர். இளவரசர் அதற்கு முன்பே, தமது உரிமைகள் யாவற்றையும் தாமாகவே வேண்டாமென்று விடுத்து அம் மங்கையை விவாகம் செய்யத் தீர்மானித்தார்.

---

### "நாம் குரங்குகளின் சந்ததிகளே!"

தற்கால மனிதர்களாகிய நாம் குரங்குகளின் சந்ததிகளே என்றும், பல ஆயிரம் வருஷங்களுக்கு முன் நம முன்னோர்கள் குரங்குகளாகவே இருந்திருக்க வேண்டுமென்றும் பிரபல விஞ்ஞான சாஸ்திரிகள் நீண்ட காலமாகவே கூறிவருகின்றனர். அதைக் கேட்பதற்கு நம்மவர்களில் பலர் அருவருப்படையலாம். ஆயினும் உண்மையே அதுவாக இருப்பின் அருவருப்படைவதில் என்ன பயன்! அந்த ஆராய்ச்சிதான் உண்மையென்று புரொபஜர் ஜி. எலியட்ஸ்மித் பல ஆதாரங்களைக்கொண்டு இப்போது ஸ்தாபித்து வருகிருர். சென்ற மாதம் 17-ந் தேதி அவர் இங்கிலாந்தில் செய்த பிரசங்கத்தில் அனேக ஆண்டுகளுக்குமுன் இறந்து போனவர்களின் எலும்புகள், பற்கள் அமைப்பு, மண்டையோடு முதலியவற்றை பிரஞ்சு, பிரிட்டிஷ் நிபுணர்கள் பலர் ஆராய்ந்து பார்த்த பிறகே இம்முடிவுக்கு வந்திருப்பதாக அவர் தெரிவித்தார். இவர் மட்டுமன்றி மற்றும் பற்பல ஆராய்ச்சியாளர்களும் இதே முடிவுடன் இருக்கிறார்கள்.

### கூந்தலை உலர்த்தும் கருவி.

ஹிட்னீ நகருக்கருகில் உள்ள மாண்பியில் குளிப்பவர்களுக்கு ஒரு புதிய ஆசை பிறந்திருக்கிறது. அதாவது குளித்தவுடனே கூந்தலைக் காயவைப்பதற்கு அவர்கள் மின்சாரத்தை உபயோகப் படுத்துகின்றனர். இதற்கென ஒரு நாணயத்தைப் போட்டால் மின்சாரம் கூந்தலைக் காயவைக்கக் கூடியவாறு அங்கங்கே இவ்வொரு கருவி வைக்கப்பட்டிருக்கிறதாம்.

---

### தங்கப் பல் ஒன்றுக்கு பவுண் 60.

பஞ்சூரியாவிலுள்ள ஹாசர்பினில் வசித்துவரும் மிஸ்டர் ஏ. கிரவட் சாப் என்பவர், சமீபத்தில் கொள்ளைக்காரர்களால் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார். அவர் தமது வாயில் இயற்கையான பற்கள் 10 விழுந்து விட்டதின் காரணமாக, 10 தங்கப் பல் கட்டியிருக்கிருர். கொள்ளைக் கூட்டத்தார் அவரை ஓர் தனவந்தரென நினைத்துக்கொண்டு, தங்கப்பல் ஒன்றுக்கு பவுன் 60 வீதம் மொத்தம் 10 பற்களுக்கும் பவுன் 600 கொடுத்தால் அவரை விடுதலை செய்வதாகக் கூறுகிருர்கள்.

---

## சமரச நன்னிலை.

### ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் கண்ட உண்மை.

### அவர் வாழ்க்கையின் மூன்று பகுதிகள்.

"உள்ளது ஒன்றே;
அதனைப் பலவாகக்கூறுவர் பெரியார்"

('ஸ்ரீஇராமக்கிருஷ்ணவிஜயம்")



இராமக்கிருஷ்ணர்.

(12-3-34 இன் தொடர்ச்சி)

ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் கண்ட சமரசநன்னிலை, உலகமக்களை ஒன்றுகப்பிணைப்பதற்கென்றே அறிவினுல் ஆராய்ந்து தொடுக்கப்பட்ட ஒருகொள்கையல்ல. அது அவரது பலவகைப்பட்ட அநுபூதி யுண்மைகளினின்றும் வடித்தெடுக்கப்பட்ட ஞானசாரமேயாகும். ஆதலின் அவ்வநுபூதி வாழ்க்கை சென்ற முறையினைச் சற்றுக் கவனிப்பாம் அவ்வாழ்க்கை மூன்று பகுதிகளோடு கூடியதாகக் காணப்படுகின்றது. முதற்பகுதியில் அவர் தேவி மந்திரத்தைக் குலகுருவிடமிருந்து பெற்றுக்கொண்டு, தக்கணேசுவரத்துக் காளி தேவியைவழிபடுதலிலும் அவட்கு உகந்த தொண்டு செய்தலிலும், தியானத்திலும் பொழுதைக் கழித்துவந்தார். தேவியைத் தமது இஷ்டதெய்வமாகப்பூண்டு, தமது மனதை முற்றிலும் அவள்மீது நிலைநிறுத்தப் பயின்ருர். அல்லும்பகலும் அவரது மும் அத்தாயின் நினைவன்றி, வேறு நினைவற்றவராய் வாழ்ந்தார். அம்பிகையைக் காணும் ஆசையொன்றே அவரது மனதிற் குடிகொண்டது. அவரது செயல்களெல்லாம் அந்த ஒரு குறிப்பைநோக்கியே

---

### ஆத்மபலம்

எனக்குச் சரீரபல மில்லாதிருக்கலாம். ஆனல் நான் வாளேனும் துப்பாக்கியேனும் கொண்டு போர் செய்யப் போவதில்லை, புத்திபலத்தால் யுத்தம் நடத்தப் போகிறேன். ரானுவபலம், சரீரபலம் இவற்றைத்தவிர வேறு சக்தியில்லை யென்று நினையாதே. ஞானத்தை ஆதாரமாக் கொண்டு நிற்கும் ஆத்மபலம் என்பதோர் சக்தி இருக்கின்றது.

மகான்அரவிந்தகோஷ்.

---

தாரைபோன்று செல்லலாயின. அன்றியும் தம்மை ஓர் சேயாகவும், அம்பிகையைத் தமது தாயாகவும் கருதியே அவர் அன்பு செய்துவந்தார். அன்னையைக் காணும் பேரவாவின் முதிர்ச்சியால், அவர் நீரைப் பிரிந்த மீனெனவே துடித்தார். தம்முயிரை மாய்த்துக் கொள்ள முயன்ற தன்மையையு மடைந்தார். அப்போது தேவியார், தமது அருவ்வடிவத்தைப் புலப்படுத்தியருளினர். அதன்பின்னர், அம்மையை எப்போதுந் தொடர்ந்து காணும் பேற்றிற்காக, அவளது அருளை மன்றுடிக் கேட்டு, அதனையும் பெற்றூர். தமக்கென ஒன்றுமில்லாத தன்மையராய், அம்மையின் கரத்தில் உள்ள ஓர் கருவியைப் போன்று அவர் ஒழுகிவந்தார். அப்பால், அவரது தூயவுளத்துத் தேவியின் திருவுளக் குறிப்பின்படியே, வேறு வேறு மார்க்கங்களைப் பின்பற்றும் ஆசையொன்று எழுந்தது. அவரது அநுபூதிவாழ்க்கையின் இரண்டாவது பகுதி அது முதலே தொடங்கிற்று சாந்தபக்தி, தாஸ்யபக்தி, சக்யபக்தி, வாத்ஸல்யபக்தி, மதுரபக்தியென்னும் ஐவகை உறவு முறைகளையும் ஒன்றினபின் ஒன்றுய்க்கொண்டு இறைவனை வழிபடலாயினர் முடிவில் ஒவ்வொரு முறையின் வழியாகவும் ஒரே முடிவிடத்தை கண்ணினர். சீதாதேவி, பாலராமன், கண்ணபிரான் முதலியோரது காட்சிகளைப் பெற்றூர். பின்னர் தந்திர நூற்சாதனங்கள் அனைத்தையும் ஓர் பார்ப்பன நங்கையினைக் குருவாகக் கொண்டு பயின்று, ஒவ்வொன்றிலும் சுருங்கிய காலத்திற் சிறந்த வெற்றியை அடைந்தவர் குண்டலினி யோக முறையின் முடிவையும் எய்தினர். தோத்தாபுரியாரைக் குருவாகத் துணைக்கொண்டு, நிர்விகற்ப சமாதி நிலையை மூன்று நாளிற் பெற்றூர். பின்னும் மகம்மதிய சாதனங்களையும், கிறிஸ்தவ மத சாதனங்களை பயின்று, அல்லாவின் தரிசனத்தையும் யேசுநாதரின் தரிசனத்தையும் முறையே பெற்றூர். அதனோடு சாதனங்கள் தீர்ந்தன. பின்னர் அநுபூதி வாழ்க்கையின் மூன்றும் பகுதி தொடங்கிற்று; அவர் தம்மைச்சார்ந்த மக்களனைவர்க்கும், அவரவரது நிலைக்கேற்ப உய்யும் வழியைக் காட்டியும் ஞானநெறியில் முன்னேறச் செய்தும் வந்தனர். தமது பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றுதற்குத் துணைபுரிதற்பொருட்டே தோன்றியிருந்த ஆடவரையும் மகளிரையும் அவர் ஞானநெறியிற் பயிற்றியும், ஞானோபதேசமுறையிற் பழக்கியும் வந்தனர்.

தாம் செய்யும் தொழிலனைத்தையும் தமது அன்னையாகிய தேவியின் கருவியாயிருந்தேபுரிந்தனர். உலகமக்கள் அனைவரையுந் தெய்வ வடிவங்களாகவே கருதி தமது தொழில்களை யாவற்றையும் தொண்டாகுமாறே இயற்றிவந்தார். பார்க்குமிடமெங்கும் எவ்வுயிரினும் எப்பொருளிலும் தேவியம்மையின் உருவத்தையும் அவளது திருவருட் குறிப்பையுமே காண்பாராய், அதற்கிசைய யாவரிடத்தும் என்றும் எப்போதும் ஒழுகிவந்தார். ஆகவே, முதற்பகுதியில் அவர் பிறதெய்வங்களையும் பிற நெறிகளையும் இழிவாகக் கருதாது, தமது இஷ்டத்தின்கண் கருத்தூன்றியவராய் (இஷ்டமானதெய்வத்திலும், அதனை அடையுநெறியிலும் ஈடுபட்டவராய்) இடையருது அநுபூதிக்காகத் துடித்து இஷ்டசித்தியை அடைந்தனர். இரண்டாவது பகுதியிற் பலவகைப்பட்ட சாதனநெறிகளையும் முறையாகப் பயின்று ஒவ்வொன்றின் இறுதியையுங் கண்டார். அன்றியும் ஒரே மெய்ப்பொருளின்கண் எல்லாநெறிகளும் முடிவதையுங்கண்டார். பரம்பொருளின் பல்வேறு வடிவங்களையும் வடிவமற்ற தன்மையினையும், காண்பான், காணப்படும் பொருள், காட்சி என்னும்மூன்றுக்கும் அப்பாலான பிரமத்தி னியல்பையும் உணர்ந்தார். மூன்ருவது பகுதியில உயர்வற உயர்ந்த சமரசபாவனையையும் அதன் பயனுந் தொண்டையும் அனுபவித்தார். (வரும்)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: ஸ்ரீமுகவருஷ
பங்குனிமீ ௨வ வியாழக்கிழமை.


## சமயபாடம் பயிற்றல்.

இந்த யாழ்ப்பாணத்திற் சைவப் பள்ளிக்கூடங்கள் அதிகமாக ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நீதிநூல்களும் சமய சம்பந்தமான பாடங்களும் மிக்க ஆர்வத்தோடு பிள்ளைகட்குப் பயிற்றப்பட்டு வந்தன. அக்காலத்தில் சைவவித்தியாசாலைகளில் சமயப் பிரசங்கம், சமய தீட்சை வைத்தல், குருபூசை என்னுமிவைகளும் மிகச் சிறப்பாகவும் விதிப்படியும் நடைபெற்று வந்தன. சுருங்கச் சொல்லுகில் சைவப்பிள்ளைகட்குச் சைவமுறைப்படி சைவவித்தியாசாலைகளிற் கல்வி பயிற்றப்பட்டதெனலாம். சைவ வித்தியாசாலைகளின் அதிகாரிகளும் ஆசிரியர்களும் சமய பாடங்களைப் பரீட்சித்தற்கும் சித்தியடைந்த மாணாக்கருக்குப் பரிசுகள் கொடுப்பதற்குமான ஏற்பாடுகளைத்தானும் சில சில பள்ளிக்கூடங்களிற் செய்திருந்தனர். பள்ளிக்கூடப்பிள்ளைகள் தினந்தோறும், இல்லையேல் விசேஷ காலங்களில் பரிசுத்தராய்ச் சமீபத்திலுள்ள ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபடுதலாகிய நியதியும் சில வித்தியாசாலைகளிற் காணப்பட்டது. ஆனால் இவையனைத்தும் ஆரம்பசூரத்துவமாய் முடிந்தனவேயென்பதை இப்பொழுது அறிதல் பெரும் மனவருத்தத்திற்கு இடமாகும்.

சபைகளாலும் சங்கங்களாலும் தனித்தோராலும் நடத்தப்படும் சைவ ஆங்கில வித்தியாசாலை கல்லூரி தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் என்னுமிவைகளுள், ஆங்கில வித்தியாசாலை கல்லூரிகளில் கொஞ்ச அளவிற்காயினும் சமயபாடக்கல்வி கிரமமாகப் பயிற்றப்படுகின்றதெனலாம், ஆனால் இவ்வாங்கில வித்தியாசாலை கல்லூரிகளிலும் சமயபாட விஷயமாக முன்னிருந்த ஆர்வமும் முயற்சியும் இப்பொழுது குன்றத் தலைப்பட்டுவிட்டனவெனலாம்.

இனி, தமிழ்வித்தியாசாலைகளின் நிலைமையை ஆராயுமிடத்து அனேக பள்ளிக்கூடங்களில் ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூதுரை முதலிய நீதிநூல்களை, சமயபாடங்களைப் படிப்பித்தலை அறவே மறந்துவிட்டார்களெனலாம். மிகச் சில வித்தியாசாலைகளிலே தவிர ஏனைய சைவப்பள்ளிக்கூடங்களில் மூதுரை சமயபாடம் என்னுமிவைகளைப் படிப்பித்தற்கான நேரசூசிகையைத்தானும் காணேம். சில வித்தியாசாலைகளில் நேரக்குறிப்பில் சமயபாடத்துக்கென நேரம் குறிக்கப்பட்டிருப்பினும் படிப்பிக்கப்படக் கண்டிலேம். இன்னுஞ் சில பள்ளிக்கூடங்களில் சமயபாடத்திற்கெனக் குறிக்கப்பட்ட நேரத்தில் வேறு பரீட்சைக்குரிய பாடங்கள் படிப்பிக்கப்படுகின்றன. அந்தோ, வேலியே பயிரைமேயத் தலைப்பட்ட வாறுக, சைவ முறைப்படி சைவப்பிள்ளைகட்குக் கல்வியைப் பயிற்றுவதற்கென ஏற்பட்ட சைவ வித்தியாசாலைகளில் சைவசமயத்தை அநுட்டிக்கும் உபாத்தியாயர்களே இப்படி அக்கிரமஞ் செய்வார்களென்றால், இனி இதற்கு ஆரோடு நோவது? இதனை ஆர்க்கெடுத்துரைப்பது?

சமயபாடங்களை நீதிநூல்களைப் பயிற்றுமைக்கு நாம் பள்ளிக்கூட அதிகாரிகளைக் குற்றஞ் சொல்லவொண்ணது; பெற்றோரையும் பிள்ளைகளையும் குறைசொல்லலாகாது வித்தியாபகுதியாருக்கும் இதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. மேலும் அவர்கள் சமயபாடம் பயிற்றுவதற்கு விரோதிகளல்லர். இந்த விஷயமாகக் குறைசொல்லுகில் உபாத்தியாயர்களையே குறைசொல்லவேண்டும் சமயாபிமானம் ஈசுரபத்தியென்னும் இவ்விரண்டும் உபாத்தியாயர்களிடத்திற் குன்றத்தலைப்பட்டமையே இதற்குக் காரணமாகும். இந்த இரண்டு மேலான குணமும் இல்லாதவர்கள் ஆசிரியராயிருத்தற்கு அருகரல்லரே. இவர்கள் இந்த விஷயத்தில் அலட்சியஞ் செய்தலை உடனே தவிர்த்துவிடல் வேண்டும் தாங்கள் கூலிக்கு மாரடிக்கிறவர்களாக ஒருபோதும் இருக்கவொண்ணது. உபாத்தியாயர்களாயுள்ளவர்கள் இச்சஞ்சலபுத்தியை அறவே தவிர்த்துவிடல்வேண்டும். நீதிநூல்களையும் சமய நூல்களையும் பிள்ளைகட்குக் கிரமமாகப் பயிற்றுவதனல் அப்பிள்ளைகள் ஒழுக்கமுடையவராகவும் அறிவுடையவராகவும் ஈசுரபத்தி கீழ்ப்படிவு கல்வியில் ஆர்வம் முதலிய குணங்களுஞ் செயல்களும் உடையவராகவும் வருவர். இவைபோடு மாத்திரம் அமையாது அவர்களுக்குத் தமிழிலும் அதிக தேர்ச்சியுண்டாகும்.

இனி, சமயபாடத்தைப் புத்தகங்களின்படி படிப்பித்துவிடுதல் மாத்திரம் அமையுமென்று ஆசிரியர் எண்ணிக்கொள்ளவொண்ணது. போதனையிலும் பார்க்கச் சாதனையே கைகண்டது. ஆதலால் உபாத்தியாயர்கள் சமய அநுஷ்டானங்களைத் தாமும் தவருது சாதனைசெய்துகொண்டு பிள்ளைகளையுஞ் சாதனைசெய்யும்படி தூண்டிவிடல் வேண்டும் அவர்களுக்குச் சமையம் வாய்க்குந்தோறும் தீட்சைபெறுதல், ஆலயவழிபாடு, சந்தியாவந்தனஞ் செய்தல், விரதமனுட்டித்தல், முதலியவற்றைப்பற்றியும் பெரியாரைப்பேணல் நல்லொழுக்கம் கல்வியின் பயன் சற்சனர் சகவாசம் சத்தியம் முதலிய விஷயங்களைப் பற்றியும் அப்பிள்ளைகளின் மனத்தில் உறப் பதியும் வண்ணம் போதித்தல் வேண்டும். அன்றியும் கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சமய பாடப் பரீட்சைகட்கு அப்பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி அப்பரீட்சைகளிற் சித்தியடையச் செய்தல் வேண்டும். வித்தியாசாலை அதிபராயுள்ளோரும் தம் வித்தியாசாலையிற் சமய பாடக்கல்வி நீதிநூற்கல்வி கிரமமாக நடக்கின்றனவோ வென்பதைப்பார்த்து, அக்கல்விகளைப்பயிற்றுவதிற் சோர்வு ஏற்படுமேல் உபாத்தியாயர்களுக்குத் தெருட்டி அவற்றைப் பயிற்றச் செய்தல் நன்றும்.

## ஆசிரியர் குறிப்புக்கள்.

### ஏன் தாமதம்?

ஞாயிற்றுக் கிழமைகளில் தபால் சேர்ப்பதைச் சிக்கனத்தின் பொருட்டு இலங்கைத் தபாற்பகுதியார் நிறுத்தி விட்டமை நாசி மயிர் பிடுங்கி ஆட்பாரம் குறைக்க முயற்சித்தமையை நிகர்க்கும் என்றும், அதனுல் ஈற்றிற் பல கஷ்டங்கள் ஏற்படும் என்றும் இப்பத்திரிகையில் நாம் பன்னிப் பன்னி உரைத்த மொழிகள் அக்காலத்தில் எமதரசினர் செவிகளில் ஏறவில்லை. எனினும், இப்போது, தாம் செய்த ஒழுங்கினல் ஒரு பயனுமில்லை என்பதைப் போக்குவரவுப்பகுதி மந்திரநிர்வாகசபையார் உணர்ந்து வருகிற அக்டோபர் மாதம் தொடக்கமாகத் தொன்மைபோல், ஞாயிற்றுக்கிழமைகளில் தபால் சேர்த்துக் கொடுக்கும் முறையை அநுசரிக்க நிச்சயித் திருக்கின்றனரென்பதை அறிந்து மகிழ்வெய்துகின்றேம்; ஆனல், நாம் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறோம்; ஞாயிற்றுக் கிழமைகளில் தபால் சேர்த்துக் கொடுக்கும் முறையை ஒழித்து விட்டமை பிழை என்பதை உணர்ந்து விட்டார்கள். அந்தப் பிழையைச் சிக்கிரத்தில் நிவிர்த்தி செய்வதே பெரியோர் தன்மையாகும். எனவே, தாம் இதுகாறும் பரீட்சார்த்தமாக அநுசரித்து வந்த ஒழுங்கு பிழையெனக் கண்டவுடனே, முந்திய ஒழுங்கினை உடனே கைபாடினல் என்ன? அக்டோபர் மாதம் வரைக்கும் ஏன் தவணையிடல் வேண்டும்?

### பிரிட்டிஷார் மனப்பாங்கு!

இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் ஜெர்மன் பாராளுமன்றத்துக் கட்டடத்தைத் தீக்கிரையாக்கினர் என்று சில சமதர்மவாதிகள் ஜெர்மன் அரசினரால் சிறைபாக்கி விசாரணை செய்யப் பட்டனர். அவர்களில் ஒருவர் இருவர் ஒழிந்த ஏனையோர் நிரபராதிகள் என ஜெர்மன் உயர்தர நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். எனினும் ஜெர்மன் அரசினர் விடுதலையாக்கப்பட்ட பல்கேரியச் சமதர்மவாதிகளை விடுதலை செய்யாது சிலகாலம் சிறையில் வைத்தனர். இச்செயல் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பலவற்றிற்கு — அவற்றிலும் விசேஷமாகக் கன்சர்வேற்றிவ் பத்திரிகைகளுக்கு — ஆத்திரத்தை விளைத்தது. இதற்கு முன் சமதர்மக் கொள்கைகள் மீதும் சமதர்மவாதிகள் மீதும் குரோதம் பாராட்டி வந்த இந்த வெள்ளைக் கன்ஸர்வேற்றிவ் பத்திரிகைகளுக்கு இருந்தாப்போலிருந்து ஜெர்மனியில் அடைபட்டுக் கிடந்த பல்கேரியச் சமதர்மவாதிகளின்மீது அளவுகடந்த அபிமானம் ஏற்படலாயிற்று. "விசாரணையில் நிரபராதிகள் எனக்காணப்பட்டோரைப் பின்னும் சிறையில் அடைத்துவைத்தல் நாகரிக உலகத்திற்கடுக்குமா? இது முறையா; இது நீதியா? என்று "ஒப்சேவர்" "டெயிலி டெலிகிறுப்' "மார்ணிங் போஸ்ற்", முதலாம் கன்சர்வேற்றிவ் பத்திரிகைகள் பந்தி பந்திகளாய் எழுதி ஓலமிடத் தொடங்கின. ஈற்றில் அச்சமதர்மவாதிகள் வேறு காரணங்களினல் ஜெர்மன் அரசினரால் விடுதலையாக்கப்பட்டார்கள்; தமது கூக்குரலினலேயே அவர்கள் ஒருவாறு விடுதலையாக்கப்பட்டார்கள் என்று இப்போது இந்தவெள்ளைப் பத்திரிகைகள், கும்மாளமிட்டுகின்றன. என்னே கருணை! ஆனல் இந்தப்பத்திரிகைகளை இந்தியாவில், பிரிட்டிஷ் பரிபாலனத்தின் கீழுள்ள இந்தியாவில் நடக்கும் அட்டூழியங்களைப்பற்றி இற்றைவரை ஒருவரியாவது எழுதினவா? விசாரணையில்லாமல் எத்தனையோ நிரபராதிகளானமக்கள் கிங்டனின் அவசரச்சட்டத்தில் அகப்பட்டு அவதிப்படுவதை இப்பத்திரிகைகள் கேள்விப்பட்டிருக்கவில்லையா? இந்தியாவில்,பிரிட்டிஷ்நீதி செலுத்தப்படும் இந்தியாவில், நடத்தப்படும் எண்ணுக்கடங்கா அட்டூழியங்களைக்கண்டும் காணுதார்போல இருக்கும் இந்த வெள்ளைப் பத்திரிகைகளின் மனப்பாங்கை என்னென்றுரைப்பது? அல்லது தம் இனத்தவரான பிரிட்டிஷார் இழைப்பன யாவும் நீதியின் பாற்பட்டனவே என்பதுதான் இப்பத்திரிகைகளின் திருவுளமோ?

### விகட நாடகம்!

இப்போது பலகாலமாய் ஜெனிவா என்னும் இடத்தில் ஆயுதப்பரிகரண மகாநாடு நடந்து வருவது பலருக்குந் தெரிந்திருக்கலாம். இம்மகாநாட்டில் உலக வல்லரசினரிற் பலர் சேர்ந்து, யுத்தமுஸ்தீப்புகளைக் குறைக்கும் நோக்கமாக இருக்கின்றனர் ஆயுதப்பரிகரணமகாநாடு சித்திகரமாக முடியாவிட்டால்உலகத்திற்கே ஆபத்துவந்துவிடுமென பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியான சேர். ஜோன் சைமனும், ஏனைய உலக அரசியல் வாதிகளும் கண்ணீர் விட்டுக் கதறுகின்றனர். ஆனல் இவர்கள் கிரியாம்சத்தில் எப்படி நடந்து வருகின்றார்கள் என்பதைச் சிந்திக்கும்போது, மேனட்டாரின் மனப்பாங்கு எத்தன்மையதென்று நன்கு விளங்கும். ஆயுதங்களைக் குறைக்கவேண்டும், யுத்தம் வேண்டாமென்று மற்றெல்லோரினும் பார்க்க உரத்துக் கூவும் பிரிட்டிஷ் அரசினர் தம் ஆகாயப்படையை அதிகரிக்க வேண்டும் என முன் வந்திருக்கின்றனர். புதிய வருஷக் கடற்படைத் திட்டத்தில் 2,980,000 பவுண் சென்ற வருஷத்தைக் காட்டிலும் மேலதிகமாக ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது. சிங்கப்பூர்க் கடற்படைத் திட்டத்திற்காக முன்னர் 77½ லட்சம் பவுண்களை ஒதுக்கி வைக்கப்படிருந்தன. ஆனல் அது இப்போது ஏறக்குறைய 87 லட்சம் பவுண்களாகிவிட்டது பிரிட்டிஷாரின் செயல் இப்படியிருக்க, பிரான்ஸ் தனது எல்லைப்புறங்களைப் பெலப்படுத்துவதிலும் இராணுவத்தை வலுப்படுத்துவதிலும் முன்னரிலும்பார்க்க இப்போது மிகப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டு வருகிறது. ஒரு புறத்தில் ஆயுதங்கள் ஒழிய வேண்டும் என்று கூறி மறறப் பக்கத்தில் இப்படி ஆயுதங்களையும் ஆகாய விமானங்களையும் கடற்படைகளையும் பெருக்கிக்கொண்டு வரும் வல்லரசினரின் செயல்களைப்பற்றி நாம் கூறுவதென்ன? கடந்தமகா ஐரோப்பிய யுத்தத்தினல் ஏற்பட்ட இன்னல்கள்தீர முன் இன்னேர் யுத்தத்திற்கு ஆயத்தமாக நிற்கும் வல்லரசினரின் விபரீத புத்தியை என்னென்றெடுத்துரைப்பது!

## உலகம் பலவிதம்.

"அம்மான், வாருங்கள்; வாருங்கள்; இப்படி உட்காருங்கள்; நான் போன சனிக்கிழமை உங்கள் வீட்டிற்கு வந்து உங்களை விசாரித்தேன்; அப்பொழுது வீட்டிலுள்ளவர்கள் நீங்கள் வெளியே போயிருப்பதாகச் சொன்னர்கள்; இப்பொழுதும் சில இடங்களுக்குப் போய்ச் சிலரைக் காணவேண்டுமென்று புறப்பட்டேன்; அதற்கிடையில் நீங்களும் வந்து விட்டீர்கள்; நாங்கள் இரண்டுபேரும் கொஞ்சநேரம் எங்கள் விஷயமாக இங்கே இருந்து பேசுவோம். "காறு"க்கு ஆள் போய்விட்டது; வரட்டும் அதுவரையில் யோசிப்போம......" என்று முருகரைப் பெரிதும் உபசரித்து இருத்திய பேசினர் முத்துத்துரைப்பிள்ளை. இவர் ஆங்கிலம் தமிழ் இரண்டையும் நன்குபடித்தவர். இரண்டு பாஷைகளையும் கேட்பவர் மனதில் நன்கு பதியும்படி அழகாகப் பேசக்கூடிய திறமையுள்ளவர். தமிழைக்காட்டிலும் ஆங்கிலத்தை அதிகம் கற்றவர். முதியவர்; ஆனல் அவர் சரியெனினும் பிழையெனினும அரசினர்பக்கத்தையேசார்ந்து நிற்பவர். சமயம் சாதியபிமானமின்றி மேலைத் தேசத்தவர்களையும் அவர்கள் கொள்கைகளையும் அவர்கள் நாகரிகத்தையும் பெரிதும் மெச்சிப்பாராட்டுபவர். சுதந்திரத்தை விடுத்து வருப்புவாதமுறையில் அரசினருடன் சேர்ந்து உழைக்கவேண்டும், தாம சாகமுந்தி ஒருமுறையாயினும் சட்ட சபைக்குட் போய் வரவேண்டுமென்ற பேராசை பெரிதுமுடையவர்; அரசினரைப் பிரியப்படுத்தி இன்னும் அவர்களிடம் ஏதும் பெரிய பட்டத்தை வாங்கிச் சூட்டிக்கொள்ள வேண்டுமென்ற அவாக்கொண்டவர்.

* * *

முருகர்: நீங்கள் என்னைக் காணவேணுமென்றது எதற்காகவோ?

முத்து: நான் உங்களுக்கு விஷயம் தெரிந்திருக்கக் கூடுமென்று நினைத்தேன்; வருகிற கவுன்ஸிலுக்கு என்னைப் போகத்தான் வேண்டுமென்று, உங்களைப் போன்ற காரியமறிந்தவர்கள் பலர் கட்டாயப்படுத்திக் கேட்கிறார்கள்; ஆனதால் அவர்கள் கேள்விப்படி நானும் முயற்சி செய்யலாமென்று பார்க்கிறேன்.

முரு: நீங்கள் செய்யலாம், அதிற் குற்றமில்லை; நீங்கள் செய்யாமல் வேறு ஆர் செய்வது; ஆனல், அதிக சிரமப்பட்டு பொருளைச் செலவழித்து ஒருபோது வாய்த்தாலும் ஒருவருட காலத்திற்குத் தானே, அதில் என்ன சுகம் என்பதையிட்டுத் தான் நான் யோசிக்கிறேன்.

முத்து: நீங்கள் சொல்வது சரிதான். ஆனல் ஒரு விஷயம் பாருங்கள்; அது உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன்; பொறுப்பறியாத, உலகந்தெரியாத, அரசினரைப் பகைத்தால் வரக்கூடிய கெடுதிகளைப்பற்றி யுணராத இளகுள்ள வாலிபர் சிலருடைய சொல்லைக் கேட்டு, முந்தி மிஸ்ரர் துரைசாமி போன்ற விஷயமறிந்தவர்கள சிலர் தாமும மூடத்தனமாக இந்தப் புதிய கவுன்ஸிலை "போய்க்கொற்" பண்ணிவிட்டார்கள்; அதாவது பகிஷ்காரஞ் செய்துவிட்டார்கள். அதனுல் தமிழர்களுக்கு வந்த கெடுதி என்ன வென்பதை நீங்களும் அறிவீர்களென்று நினைக்கிறேன. இப்பொழுது தமிழர்கள சேர்ந்துபோகச் சிங்களவரே மேலான அதிகாரத்தை யெல்லாம் பெற்றுக்கொண்டார்கள். தமிழரென்றல அரசினருக்குப் பெரும் வெறுப்புண்டாகிறது. இனி எங்கள வாலிபர்களுட்டலர் படித்துவிட்டு உத்தியோக மில்லாமல் திரிகிறார்கள; இந்தக் கெடுதிகளெல்லாம கவுன்ஸிலை இவர்கள பகிஷ்காரஞ் செய்தமையால் வந்த பிழையாகும்; நம்முடைய சாதியாருக்குப் பெரும ஆபத்துவந்துவிட்டதேயென்ற உண்மையை நாங்கள சிலர் மாத்திரம உணர்ந்து, கவுன்ஸிலுக்குப் போகத்தான வேண்டுமென்று இரகசியமாகச் சில இடஙகளில் யாத்திரம கூட்டங்கூட்டிச் சனஙகளுக்குபபோதித்தோம;எங்கள கூட்டஙகளிற் சிலவற்றைப் பகிஷ்காரக் கட்சியார் குழப்பி விட்டார்கள். பின்பு ஒருமுறையலல இருமுறை மூமுறை, நியமனரான ஒனறை நியமித்துத்தர வேண்டுமென்று தேசாதிபதிக்கும இலஙகை மகாமந்திரிக்கும மனுப் பண்ணினேம். எஙகள கேள்விக்கு உடனபட்டுத் தேசாதிபதி நியமனரொன்றை உதவுதற்கு உடன்பட்டிருக்கிறார்.

முரு: அது சரி, ஐயா, அரசாஙகசபைக்குப் பிரதிநிதிகளை அனுப்புவது இங்குள்ள ஊரவர்கட்குச் சம்மதமா?

முத்: ஆம, சில வாலிபருக்குத் தவிர மற்றவர்களெல்லாருக்குஞ் சம்மதம். சனங்களுக்கெல்லாம சம்மதமெனபதை நாஙகள தேசாதிபதிக்குத் தெரிவித்த பிறகே அவர் நியமனரானுக்கு உடன்பட்டிருக்கிறார்.

முருகர்: ஐயா, கேட்கிறேன் என்று கோபித்துக்கொள்ள வொண்ணது, பிரதிநிதிகளைக் கவுன்ஸிலுக்கு அனுப்பக்கூடாதென்ற கொள்கை யுடையவர்களே ஊரவருட் பலராக, நீஙகள தேசாதிபதிக்குச் சட்டசபைப் பிரவேசம் எல்லாருக்குஞ் சம்மதமெனறு சொன்னது சரியல்லவே.

முத்: இல்லை, பாருங்கள்; ஊரவர்களுள் அனேகருக்கு விஷயம தொடக்கத்திலே விளஙகவில்லை. அரசாங்க சபையைப் பகிஷ்கரித்தமையினல் வரக்கூடிய கெடுதிகளையெல்லாம பிற்பாடு சனஙகளுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறோம; அதன்பின ஊரவர்களெல்லாரும கவுன்ஸிலுக்குப் பிரதிநிதிகளை அனுப்பத்தான் வேண்டுமென்ற நோக்க முடையவர்களா யிருக்கிறார்கள். அது மெய்யோ பொய்யோ என்பதை நீஙகள ஊரவர்களை உசாவி அறியலாம்.

(தொடர்ச்சி ௫-ம் பக்கம்.)

## இலங்கைச் செய்திகள்.

### தந்தைகண்ட கோரக்காட்சி

சென்ற வாரம் பின்னேரம் தங்காலையைச் சேர்ந்த ஒருவன் வேலை செய்து விட்டுக் களையுடன் வீதிவழியே வரும்போது அயலே பாயும் ஆற்றின்மீது ஓர் பிரேதம் குப்புறக்கிடப்பதைக் கண்டு, அதன் தலைமயிரைப்பற்றி அப்புறம் வைத்தபோது, அந்தோ, அது, தனது மகளின் பிரேதமே எனக்கண்டு அலறினான். ஆற்றிற்கருகே அம்மங்கை சென்றபோது வலிகண்டு அதற்குள் விழ்ந்து மாண்டாள் என்று யூகிக்கப்படுகிறது.

### இலங்கை-இந்திய டெலிபோன்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே டெலிபோன் கம்பி இணைக்கப்பட்டுவிட்டதென்று இலங்கைத் தபாற்பகுதித் தலைவருக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. ஆகவே, இனி இலங்கையும் இந்தியாவும் ஒன்றுக்கொன்று டெலிபோன் மூலம் செய்தியனுப்பலாம். இப்பொழுது இலங்கையிலுள்ள டெலிபோன்கள்மூலம் இந்தியாவில் டெலிபோன்களுள்ள இடங்களுக்குப் பேசலாம். இந்தியாவிலுள்ள கர்க்கி என்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆகாயத் தந்திமூலம், இனி இலங்கையிலிருந்து டெலிபோன்களுள்ள உலகின் பலபாகங்களுடனும் பேச முடியும்.

### இலங்கையில் ஜப்பான் துணிகள்.

இவ்வருஷம், ஜப்பானியர் பிரிட்டிஷாரையும் ஏனைய ஜாதியாரையும் வியாபார விஷயத்தில், இலங்கையில் அடக்கிவிடுவர் என்று எண்ண இடமிருக்கிறது பிப்ரவரி மாதம் 28-ம் தேதியுடன் முடிவாகும் இரு மாதங்களில் ஜப்பானிலிருந்து இங்கே 8550 சிப்பம் துணி இறக்குமதியாயிற்று. 1933-ம் முதல் இரு மாதங்களிலும் 3594 சிப்பங்களே இறக்குமதி செய்யப்பட்டன. இங்கிலாந்திலும் இந்தியாவிலுமிருந்து இவ்வருஷம் இதுவரை 877 சிப்பங்களே இறக்குமதியாயிருக்கின்றன. சென்றவருஷத்து முதல் இரு மாதங்களில் 1155 சிப்பங்கள் இறக்குமதியாயின. இவ்வருஷம், ஜனவரியிலும் பிப்ரவரியிலும், பிரிட்டனிலும் ஜப்பானிலுமிருந்து இலங்கையில் இறக்குமதியான துணிகள் வருமாறு:—பிரிட்டனிலிருந்து 342412ரூபா பெறுமதியான 976048 கஜம் துணி. ஜப்பானிலிருந்து 1302134 ரூபா பெறுமதியான 10826875 கெஜம் துணி.

### இலங்கை வர்த்தகம்.

இலங்கை வர்த்தகமானது படிப்படியாக அபிவிருத்தி யடைந்து வந்திருக்கிறதென்று தெரியவருகிறது. சென்ற மூன்று வருடங்களில் கடந்த பெப்ரவரி மாதம் தான் அதிகமான ஏற்றுமதி வியாபாரம் நடைபெற்றிருக்கிறது. தேயிலை ரப்பர் ஏற்றுமதி மிகுந்த உற்சாகம் அளிக்கத்தக்க விதத்தில் அதிகப்பட்டிருக்கிறது. இறக்குமதி மட்டும் வீழ்ந்து விட்டது. கடந்த மாதத்தில் தேயிலையும், ரப்பரும் அடியிற் கண்ட விதமாக ஏற்றுமதியப்பட்டன:—

தேயிலை:- 15288701 றாத்தல். ரூபாய் 12230949.

ரப்பர்:- 19915184 றாத்தல். ரூபாய் 5128149.

தெங்குப் பொருள் வர்த்தகமட்டும் அபிவிருத்தி யடையவில்லை. அது ஜனுவரி மாதத்தை விடக் குறைந்திருக்கிறது.

இலங்கையிலிருந்து வர்த்தகப் பிரதிநிதிகள் வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்ததன் பயனாக, வெளி நாடுகளில் தேயிலைக்கும் ரப்பருக்கும் அதிகமான தேவை ஏற்பட்டிருப்பது கவனிக்கத் தக்க விஷயமாகும்.

---


### பெழுகுதிரி யந்திரங்கள்

மெழுகு திரிகள் செய்யும் நல்ல ஜப்பானிய யந்திரங்கள் மூன்று இருக்கின்றன; ஒன்று 138 பெரிய மெழுகுதிரிகளை ஒரே நேரத்தில் செய்யும். இரண்டு தனித்தனி 198 சிறிய மெழுகுதிரிகளைச் செய்யும். மூன்றினதும் விலை 1000 ரூபா; தனித்தனியாகவும் விற்கப்படும். நாளைக் குறித்து பார்வையிடலாம்.

PRODUCE,
TRANSPORT COMPANY.
பேராதனை.

(Mis. 1222. 5-3 to 15-3-34.)


## கேம்பிரிஜ் ஜூனியர் பரீட்சை.

### சைவக்கல்லூரிப் பெறுபேறுகள்.

சென்ற டிசம்பர் மாதத்தில் நடந்த கேம்பிரிஜ ஜூனியர் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்திருக்கின்றன. சைவக் கல்லூரிகளின் பெறுபேறுகள் வருமாறு:-

#### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

சருணதிலக B.
சவரத்தினம் N. லத்தின்பாஷையுடன் விசேஷ சித்தி.
சபாரத்தினம் T.
சிவசுப்பிரமணியம் K.
வெங்கடாசலம்பிள்ளை S.
ஆனந்தம் S.
பாலசுப்பிரமணியம் S.
தர்மபால R.
ஏகாம்பரம் V.
கைலாயபிள்ளை M.
பொன்னம்பலம் A.
தம்பிஐயா
தம்பி P.
தாமோதரம்பிள்ளை N.
தனபாலசிங்கம் S.
திருஞானசோதி A.
துரைசிங்கம் S.

#### மானிப்பாய் இந்துக்கல்லூரி.

ஞானசிகாமணி A.
நவரத்தினம் J. P.
நவரத்தினம் T.
நவரத்தினம் S.
சிதம்பரப்பிள்ளை R.
ஜெபராசா T.
கனகநாயகம் S.
சுனகரத்தினம் S.
மகேசரத்தினம் P.
பொன்னுத்துரை S.
இராசகுலசிங்கம் K.
சபாரத்தினம் C.

#### இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

மகேஸ்வரி T.
வசந்தம்மாள் T.
அற்புதம் K. தமிழில் விசேஷ சித்தி.
காயத்திரிதேவி P.
பாக்கியம் K.
சற்குணம் V.

#### பரமேஸ்வராக் கல்லூரி.

இராசதுரை S. விசேஷசித்தி.
குமாரகுலசிங்கம் K.
இராசரத்தினம் S.
தர்மலிங்கம் E. கணிதத்துடன் விசேஷ சித்தி.
பாலசுந்தரம் M.
மாதேவன் பிள்ளை S.
முருகுப்பிள்ளை V.
இராசரத்தினம் V.
இரத்தினசாமி K.
செல்வத்துரை K.
சின்னையா T.
சோமசுந்தரம் E.
சுப்பிரமணியம் T.

#### சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

ஆறுமுகசாமி S.
கந்தசாமி C.
இராசையா S. சரித்திரம், லத்தின், கணிதம் என்பவற்றுடன் விசேஷ சித்தி.
சிவராஜா S.
தேவராஜா M.
துரைசிங்கம் K. கணிதத்தில் விசேஷ சித்தி.
ஆறுமுகம் V.
கணேசரத்தினம் S.
கணபதிப்பிள்ளை
கந்தசாமி A.
முதலித்தம்பி V.
சோமசுந்தரம் A.
சோமசுந்தரம் N.
தம்பிராஜா V.

இந்தப் பரீட்சையிலும் ஆண்களிலும் பார்க்கப் பெண்களே கூடிய சித்தியடைந்திருக்கின்றனர். மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய பெண்கள் 322 பேர்; சித்தியடைந்தோர் 248 பேர்; 1106 ஆண்களில் 684 பேரே இலங்கை முழுவதிலும் சித்திபெய்தினர்.

---


### விற்பனவு.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கில், ஆனைக்கோட்டை மானிப்பாய் றோட்டில் இருக்கும் தென்னந்தோட்டம் பரப்பு இருபது (20) விலைக்கிருக்கின்றது. வாங்க விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி விபரமறிந்துகொள்ளலாம்.

போ. செல்லாச்சிப்பிள்ளை,
தாவடி, யாழ்ப்பாணம்.

(Mis, 232, 15 & 22-3-34.)


## இந்தியச் செய்திகள்.

### நேரு குடும்பம்.

பண்டிதர் ஜவஹர்லால்நேருவின் தாயாரான ஸ்ரீமதி ஸ்வரூபராணி அம்மையார் தமது மருகி ஸ்ரீமதி கமலாநேருவுடன் கூடிய சீக்கிரம் கல்கத்தாவுக்குச் செல்வார் என்று இன்றைய செய்தி ஒன்று கூறுகிறது. ஸ்ரீமதி கமலா நேரு மிக்க சுகவீனமாயிருப்பதால், கல்கத்தாவில், டக்டர் பிதன் சந்திரராய் அவருக்குச் சிகிச்சைசெய்வார். ஸ்ரீமதி ஸ்வரூபராணி அம்மையாரும், ஸ்ரீமதி கமலாநேருவும் அலியூர்ச் சிறையில் பண்டித ஜவஹர்லால் அவர்களைச் சந்திப்பார்கள்.

### ஏமாற்றமா?

வட்டமேசை மகாநாட்டின் கூட்டுக் கிர்வாக சபையார், வரப்போகும் மே மாதத்தில் தங்கள் அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வறிக்கையில் பலத்த அபிப்பிராயபேதங்கள் காணப்படுமென்றும், இந்தியர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் விளைக்கக்கூடிய பல விஷயங்கள் அடங்கியிருக்கக்கூடுமென்றும் அரசியல்வாதிகள் அபிப்பிராயப்படுகின்றனர். இது சம்பந்தமாக ஸ்ரீ எம். ஆர். ஜெயக்கர் ஏப்பிரல்மாத இறுதியில் லண்டனுக்குச் செல்வாராம்.

### அடிகளும் அரசியலும்.

மகாத்மாகாந்தியடிகள் சென்ற சனிக்கிழமை பாடலிபுரத்திற்குப் பிரயாணமானார். தேசிய மகாசபையின் எதிர்கால வேலைத்திட்டத்தைப் பற்றி ஓர் பத்திரிகை நிருபர் கேட்டதற்கு அடிகள் பின்வருமாறு விடையளித்தார்:—'எதிர்கால நிகழ்ச்சிகளைக் கண்டறியும் சக்தி எனக்கில்லை. மூன்று மாதங்களுக்குப்பின் என்ன நேரப்போகின்றது என்பதுபற்றி நான் ஒன்றும் கூறுவதற்கில்லை. அரசியல் விவகாரங்களில் தற்காலிகமாகத் தலையிடுவதில்லை என நான் கொண்ட சபதம் ஜூலை மாதம் 31-ம் தேதியுடன் முடிவாகிறது. அதன்பின் இதுபற்றி நான் யோசனைசெய்வேன். அதுவரை பூகம்ப நிவாரணவேலையும் தீண்டாமை யொழிப்பு வேலையுமே எனக்குப் பிரதானமானவை.

### இந்து-முஸ்லீம் ஒற்றுமை.

"முஸ்லீம்கள், இந்துக்கள் அல்லது ஏனைய வகுப்பினர் அநுசரிக்கும் கொள்கை, வேலைத்திட்டம் மனப்பான்மை இவைகளையே இந்தியாவின் எதிர்காலம் பொறுத்திருக்கிறது என்பதே எனது நம்பிக்கை. இந்திய அரசியல் வானத்தில் நம்பிக்கை என்னும் பிரகாசம் தோன்றியிருந்தபோதிலும், மிக்க தீவிர பிரயாசை அவசியமாக இருக்கிறது. தேசத்திற் பூரண ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஏற்படவேண்டும். முஸ்லீம்கள் அரசியல் சம்பந்தமாகத் தீர்க்காலோசனையோடுகூடிய முடிவுக்கு வருவார்கள் என்பதில்' எனக்கும் நம்பிக்கையுண்டு. இந்தியாவுக்கு நன்மையானதை ஆதரிக்கவோ, அல்லது தேசநன்மைக்காக வேலைசெய்யவோ, விரும்புவதில், முஸ்லீம்கள் இதரவகுப்பாருக்குப் பின்வாங்கமாட்டார்கள் என்றும் நம்புகிறேன். புதிய அரசியற்றிட்டத்தின் கீழ் தங்களுக்குப் பாதகம் ஏற்படாதென்பதற்கு உறுதி ஏற்படும்பொருட்டு தற்கால நிலைமையில் முஸ்லீம்கள் பாதுகாப்பைக் கோருவது நியாயமேயானாலும் தேசத்தின் பொது நன்மையை அவர்கள் மறந்துவிட கூடாது. முஸ்லீம்களுக்கும் ஏனைய வகுப்பினர்க்கு மிடையே சிநேகபான்மை நல்லெண்ணம் என்னும் இவைகள் ஏற்படுத்த நான் என்னால் இயலுமானதைச் செய்வேன் என்று உறுதி கூறுகிறேன்" என்று முஸ்லீம்லீக் எனப்படும் பிரதம முஸ்லீம் ஸ்தாபனத்துத் தலைவராய் இப்போது நியமிக்கப்பட்டுள்ள எம். ஏ. ஜின்னா அவர்கள் ஓர் பத்திரிகை நிருபருக்குக் கூறினார்.

### காங்கிரசிற்குள் அபிப்பிராயபேதம்

காங்கிரஸ் எனப்படும் அகில இந்திய தேசிய மகாசபைக்குள் இருந்த அபிப்பிராயபேதத்தை ஒழித்து, சுயராஜ்யக்கட்சியைப்போன்ற ஸ்தாபனத்தை நிறுவி அதன் மூலமாகச் சட்டசபைகளைக் கைப்பற்றுவதைப் பற்றி ஆலோசிக்கும் பொருட்டு டெல்லியில் ஓர் மகாநாடு கூடும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இது விஷயமாகக் காங்கிரஸ் வாதிகளுக்கிடையே பலத்த அபிப்பிராயபேதம் இருந்து வருவதால் மேற்படி மகாநாடு நடவாது என்று தெரிகிறது. தேசியமகாசபைக்குள் இப்போது மூன்றுவித மான அபிப்பிராய கொண்டவர்கள் இருக்கின்றனர். வங்காளத்திலும் சென்னையிலும் உள்ளவர்கள் சட்டசபையைக் கைப்பற்ற வேண்டுமென அபிப்பிராயமுறுகின்றனர். ஆனால் பம்பாய்க் காங்கிரஸ்வாதிகள் இதற்கு மாறாக நிற்கின்றனர். பம்பாய் ஸ்ரீ கே. எவ். நரிமான் அவர்களைத் தலைமையாகக் கொண்ட கட்சி, அகில இந்திய தேசிய மகாசபையைக் கூட்டிச் சட்டமறுப்பியக்கத்தை நிறுத்தவேண்டுமென விரும்புகிறது. டக்டர் அன்சாரியைத் தலைவராகக் கொண்டுள்ள மூன்றாவது கட்சி, சட்டசபைப் பிரவேசத்தைப் பற்றிச் சிந்திப்பதைவிடுத்து, மகாத்மாகாந்தியடிகளின் விருப்பப்படி, சட்டமறுப்புச் செய்ய விருப்பில்லாதவர் நாட்டின் நன்மைக்கான தொண்டுகளில் ஈடுபடல் வேண்டுமென விரும்புகிறது.

## உலக அரசியற் செய்திகள்.

### ருஷியாவில் நிரீச்சுரவாதவிருத்தி.

ருஷியாவில், முன்னரே சமயங்களெல்லாம் அழிக்கப்பட்டு விட்டன; எனினும் இப்போது சிலகாலமாக அவை தலைகாட்ட ஆரம்பித்துவிட்டபடியால், தேவாலயங்களையும் ஏனைய சமயநிலையங்களையும் அழித்துவிடவேண்டுமென்று நிரீச்சுரவாதிகள் தலைவராகிய யாரோஸ்லாவின்கி என்பவர் கட்டளை யிட்டிருக்கிறார்.

### புதிய குடியேற்றுநாட்டு மந்திரி

தற்போது பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரியாயுள்ள சேர் பிலிப் கன்லிப் லிஸ்டர் என்பவர்க்குப் பிரபுப்பட்டம் அளிக்கப்படும் என்று நம்பப்படுகிறது. அப்படிப் பிரபுப்பட்டம் கிடைக்குமானால் அவர் தமதுபதவியினின்றும் விலகிவிடுவார் என்றும் மேலர் வார்ப்பிரபு அப் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்றும் ஒருவர் "ஒப்சேவர்"ப் பத்திரிகையில் எழுதுகிறார்.

### பிரான்சில் யுத்த ஆயத்தம்.

பிரான்ஸ் தனது படைகளைத்திறமையாகச் சீர்திருத்தியமைக்கும் பொருட்டு ஓர் திட்டம் வகுத்திருக்கிறது. அதற்காக 270 லட்சம் பவுண்கள் செலவு செய்ய அனுமதி வேண்டுமென்று பிரான்சிய அரசினர் தமது பாராளுமன்றத்தில் ஓர் மசோதா எடுத்தாண்டிருக்கின்றனர். யுத்த மந்திரி இது சம்பந்தமாக 140 லட்சம் ரூபா தற்காலத்திற்குச் செலவு செய்யலாமென்று அநுமதிக்கப் பட்டிருக்கிறது.

### ஜப்பான்—இங்கிலாந்து சமரசம்!

ஜப்பானும் இங்கிலாந்தும் வர்த்தகப் போட்டியில் சமரசம் பேச இப்போது சில காலமாக ஆரம்பித்திருக்கின்றன. பிரிட்டிஷ் பொருள்கள் விற்கப்படும் இடங்களில் எல்லாம் ஜப்பானியப் பொருள்கள் யாவும் போட்டியிட்டு நிற்பதுவே, இங்கிலாந்து இப்படிச் சமரசம் பேச முற்பட்டதன் காரணமாகும். இருகட்சியாரும் இப்போது சிலகாலமாக லண்டனில் நடத்திவந்த சமரசப்பேச்சு இப்போது முறிந்து விட்டது என்று அறிகிறோம். உலகத்தில் உள்ள எவ்விடங்களிலும் ஜப்பான் குறித்த தொகைக்குமேற் பொருள்களை அனுப்பி வியாபாரம் செய்யவொண்ணாது என இங்கிலாந்து கேட்கிறது. வேண்டுமானால் பிரிட்டிஷ் நாடுகளில் அப்படிச் செய்யலாம், மற்றுமிடங்களில் கட்டுப்படுத்தவொண்ணாது என ஜப்பான் பிடிவாதமாக நிற்கின்றது. சமரசப் பேச்சு முறிவுக்குக் காரணம் இதுவே. இது விஷயத்தில் மிக்க பிடிவாதமாயிருக்க வேண்டுமென்று ஜப்பானியப் பிரதிநிதிகளுக்கு ஜப்பானில் இருந்து உத்தரவு கிடைத்திருக்கிறது.

---


### வைத்திய விளம்பரம்.

பிரபல வைத்தியராகிய நாயன்மாகட்டு வைத்திய பூபதி ஸ்ரீ. வே. சிவசுப்பிரமணியமவர்களைக் குருவாகக் கொண்டு நான் சாதனஞ் செய்துவரும் சத்திரவைத்தியம், முறிவு, நெரிவு, பாலர், சர்வாங்க வைத்தியம் முதலியவற்றை 1933 ம் ஆ மார்கழிமீ 9-ம்உ. கொடுத்த கோட்டீசின் படி முறையே நாயன்மாகட்டு ஆயுள்வேத வைத்தியசாலையிலிருந்து விலகி, மேற்படியூர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவிலுக்கு அணித்தாக ஓர் வைத்திய சாலையை ஸ்தாபித்து அதில் வைத்தியஞ் செய்து வருகிறேன். என்னிடத்தில் வைத்தியஞ் செய்விக்க விரும்பும் அன்பர்கள் எனது வைத்தியசாலைக்கு நேரில் வரலாமென்பதை இதனாற் தெரிவிக்கிறேன்.

இங்ஙனம்,
இ. திபாகராசா.
சித்த ஆயுள்வேத வைத்தியர்.

மகேஸ்வரமணி ஆயுள்வேத வைத்தியசாலை,
நாயன்மாகட்டு,
13-3-34.

(Mis. 231. 15-3-34.)

# உபதேச காண்டம்.

எட்டாவது

## சிவநாம மான்மியச் சருக்கம்.

(முற்றொடர்.)

'சௌராட்டிரம் என்னும் நாட்டிலே நிவிரன் என்னும் பிராமணனுடைய மகன் கோசிகனென்பான் வருணாச்சிரமந்திறம்பி மற்ச மாமிசம் புசித்து மதுவுண்டு கள்வர் கூட்டத்திற்சேர்ந்து திருட்டுத் தொழில் புரிந்து திரிந்தான்; அப்பதிதன் ஒரு புலைச்சியின் மோகவலையிலகப்பட்டு அவளுடன் சோரமாக ஒழுகுங்காலத்து ஓர் இரவு அப்புலைச்சியின் கணவன் சமையம் பார்த்திருந்து அவனைப் பிடித்துத் தோளோடு தோளுறக்கயிற்றினால் இறுகக் கட்டி வெளியே இழுத்துவந்து அவன் குறியைக் கொய்தலும் அந்த மறையவன் இறந்தான். யமன் தூதுவர் அவனுயிரைக் கவர்ந்து செல்லும் பொழுது சிவகணத்தவர் அத்தூதுவர்களைப் புடைத்து அவனுடைய உயிரையும் அவரிடமிருந்து மீட்டுச் சென்று கைலையில் விடுத்தனர். சிவகணத்தவரால் நொந்த யமதூதர் தமக்கு நேர்ந்த இடரை யமனிடஞ் சென்று முறையிட்டனர். தூதர் சொன்ன முறையீட்டைக்கேட்ட கூற்றுவன் மிக்க சீற்றங் கொண்டானாய் உடனே கைலைக்குப் புறப்பட்டுச் சென்றான். அங்கே மாகாளர் நமனைக்கண்டு "அந்தகனே, நீ கவலையுடன் வந்ததென்னை" யென வினவலும், யமன் அவரை வணங்கிநின்று சிவகணத்தவர் தன் தூதுவர்க்கு விளைத்த இடையூற்றை எடுத்துச் சொல்லி வருந்தி நின்றான். அப்பொழுது மாகாளர் யமனை நோக்கி "கூற்றுவனே, கேள், அக்கோசிகனிடத்திற் சிவபுண்ணியமொன்றுண்டு; அதனாற்றான் உன் கணத்தவரை விலக்கிச் சிவகணத்தவர்கள் அவனுயிரைக் கவர்ந்து சென்று இங்கே விடுத்தனர். அவன் புண்ணியத்தை அடைந்த வரலாற்றையுந் தெரிவிக்கின்றேன்; அவதானித்துக்கொள்; இந்தக் கோசிகனென்பவன் சிறுபராயத்தில் தன்னோடொத்த வயசுடைய சகபு என்னும் பிராமணச் சிறுவனோடு விளையாடித் திரிந்தான். அவன் ஒருதினம் இவனை நோக்கி "நண்பனே, கோசிகம் என்னுஞ் சொல்லுக்குக் கூகையென்னும் பொருளுண்டு; ஆதலால் கூகையின் பெயராகிய இக்கோசிகன் என்பதை மாற்றி, சிவனுக்குரிய திருநாமங்களுளொன்றாகிய திரிபுரந்தகன் என்னும் பெயரை இனிமேல் நீ வழங்கிக்கொள்" என்று சொல்ல, இவன் அத்திருநாமத்தையே தனக்குப் பெயராக இட்டுக்கொண்டான். நமனே, அந்தத் திருநாமத்தைத் தன்பெயராக வழங்கிய புண்ணியம் இவனிடத்துளது. ஆதலின் உன் தமர் இவனுயிரைக் கவரச் சென்றமை தவறாகும்" என்றார். இவற்றையெல்லாம் கேட்ட யமன் பின்னரும் மாகாளரைப்பார்த்து "சிவகணத்தலைவரே, செய்யாப் பாதகத்தையெல்லாஞ் செய்துவிட்டு, சிவன் திருநாமமொன்றைமாத்திரம் ஒருவன் தனக்கிட்டுக்கொண்டால் அவனுக்குச் சிவகதி கொடுக்கலாமா? இப்படியானால் நான் என் அதிகாரத்தை நடத்துவதெப்படி? இது பெருந்தவறாகும்" என்று சிறிது கர்வத்தோடு சொல்லிவிட்டு அப்பாற் செல்ல முயலுதலும், மாகாளர் சீற்றங் கொண்டார் "ஏ, யமா, முன்னர்ப்படவா" என்று அவர் சொல்லுவதற்கிடையில் அவர் கரத்திலிருந்த தண்டமொன்று யமன் கன்னத்தில் வந்து தாக்கியது. கதாயுதம் பட்ட மாத்திரத்தே யமன் கன்னத்தில் இரத்தம் பெருகச் சுழன்று அலறிக் கொண்டு நிலத்தில் வீழ்ந்து வருந்தினான். அச்சமையத்திற் கைலாச பதியைத் தரிசிக்கும்படி அங்கே வந்த பிரமாவும் விஷ்ணுவும் யமன் படுந் துன்பத்தைக்கண்டு பரிவுகொண்டு மாகாளரே இப்படித் தண்டித்தாரென்பதை உணர்ந்து அவரிடஞ் சென்று 'சிவகணத்தலைவரே, அறியாமையின் பாற்பட்ட அந்தகன் இன்று செய்த அபராதத்தைப் பொறுத்தருள வேண்டும்" என்று கேட்க அவர் அங்ஙனம் பொறுத்தருளினர். யமன் உடனே வந்து மாகாளரைப் பணிந்தான். அப்பொழுது அங்கே நின்ற பிரம தேவர் அந்த யமனை நோக்கி "அந்தகனே, கேள்:

கயிலைமேவு கடவுள்தன் நாமத்தைத்
துயிலைமேவி வெருவந்து சோல்லினும்
மயிலையோர் மருங்காக்கிய வானவன்
பயிலுமிந்தப் பருப்பதம் வைகுவார்.

இக்கைலாயத்தின்கண்ணே சாநித்தியமாக எழுந்தருளிய பரமசிவன் திருநாமத்தை நனவில் மாத்திரமன்றிக் கனவிலும் வாய்புலம்பும்போது சொல்வரேல் அவர்கள் தடையின்றி இங்கேவந்து சேர்வார்கள். இந்த அபராதம் நீங்கும்படி இம்மாகாளரை நீ வாயார வாழ்த்துதி', என்றார். யமன் தன் நாத்தழும்பேறும்படி அம்மாகாளரை வாழ்த்தினான். பின்னரும் பிரம விஷ்ணுக்கள் யமன் செய்த அபராதத்தைப் பொறுத்து அருள் செய்யும்படி மாகாளரை வேண்டி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு பரமசிவனைத் தரிசித்துச் சென்றனர். யமனும் மாகாளரைப் பணிந்து அருள் பெற்றுக்கொண்டு தென்றிசையை அடைந்தான்; நமிசவன முனிவர்களே, இதுதான் மாகாளரிடத்து யமன் தண்டத்தினால் அடியுண்டவரலாறு; நிற்க, நான் உங்கட்குச் முந்திச் சொல்லிவந்த கதையைச் சொல்லி முடிக்கிறேன் கேளுங்கள்" எனச் சூதமகா முனிவர் பின்னுஞ் சொல்லுகின்றார்:

பின்னர் யமன் மாகாளரை வணங்கி, 'சுவாமீ, நந்திதேவர் சொல்லியபடி தமியேன் உம்மிடம் வந்தேன்? தவறு செய்தவனாகிய காலனை அவன் பிழை பொறுத்து விடுதலை செய்தருள வேண்டும்" என்றிரந்தான். உடனே மாகாளர் சிறையிலிருக்குங் காலனை விடுதலைசெய்து வரும்படி பூதங்கட்குக் கட்டளையிட, அவை சரேலெனச்சென்று அக்காலனைக் கொண்டு வந்து மாகாளர் முன்னிலையில் விடுத்தன. அவர் அக்காலனை உடன் கூட்டிக் கொண்டு போகும் வண்ணம் யமனுக்குத் தெரிவிக்க, அவன் காலனுடன் மாகாளரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தன்னுலகம் நோக்கிச் செல்வானாயினான், செல்லும்போது காலன் யமனைப் பார்த்து "ஐயோ, போதும், போதும், நான்பட்ட துன்பம்; ஒரு பிழையும் செய்யாமலிருந்தும் நான் இத்துணைப் பெருந்தண்டனைக்கு ஆளானேனே" என்று முறையிட்டுக் கவலைப்பட அப்பொழுது யமன் அக்காலனுக்குச் சொல்லுகிறான்:

"காலனே, உனக்கு மாத்திரம் இப்படிப்பட்ட பேரிடர் நேர்ந்ததென்றெண்ணிக் கவலைப்படாதே; நானும் இக்கடமையை ஏற்ற ஆரம்பத்தில் இவற்றைக்காட்டிலும் அதிகமான துன்பங்கட்கு ஆளானேன்; அவற்றுள் ஒன்றை மாத்திரஞ் சொல்லுகிறேன் கேள்; சந்துகமென்னும் நாட்டிலுள்ள கதலியென்னும் பட்டினத்தில் நந்தகன் என்னும் அரசன் நீதிதிறம்பாது அரசாண்டு வந்தான். அவனுடைய மனைவியின்பெயர் காமதை; அவள் பேரழகுடையவள், அக் காமதையென்பவள் அரசன்தேவியாயிருந்தும் கற்புநெறி தவறியவளாக, அரசன் அவளை விலக்கிவிட, அவள் ஊரெங்குந் திரிந்து பலரோடுங் கூடிப் பொதுமகளாய் ஒழுகுங்காலத்துத் துர்ப்புத்தி என்னுமொருவனுடன் கூடிக் கருப்பந்தரித்தாள். அதன்பின் அவனை விடுத்து வசுமதியென்னும் மறையவனுடன் சேர்ந்திருந்தாள். அக்காலத்தில் ஒரு மகவை ஈன்று அம்மகவைப் புறக்கணித்து விட்டுப் பழையபடி தன்சோரனாகிய துர்ப்புத்தி என்பவனிடம் போய்ச் சேர்ந்தாள். துர்ப்புத்தியும் அவளும் ஒருநாள் தோணியில் ஏறிக்கொண்டு கடலைக் கடக்கும்போது, இடையிற் பெருங் காற்றடிக்க அதனால் மரக்கலம் கவிழ அவர்களிருவருங் கடலுள் மூழ்கி இறந்தார்கள். அப்பொழுது எனது தூதுவர் அவர்களுடைய உயிரைக் கவர்ந்து கொடுவந்து அவர்கட்குக் கொடிய தண்டனை புரிய, அவர்கள் ஓலமிட்டனர். உடனே வீரபத்திரக் கடவுளுடைய கணத்தவர்கள் அபுத சக்தராய் அங்கேவந்து என்னுடைய தூதுவர்களை அதஞ்செய்து அவ்விரு உயிர்களையும் மீட்டுச்செல்ல, நான் அதனை அறிந்து உடனே சென்று வீரபத்திர கணத்தவரைத் தடுத்தேன், அவர்கள் என்னைப்பிடித்து என் பாசத்தினாலேயே தோளொடு தோளுறப் பிணித்து இழுத்துக் கொண்டுபோய்ச் சக்கரவாளகிரியின் குகையொன்றினுட் புகுத்திச் சிறையிட்டுப் பூதங்களைக் காவலாக வைத்தனர். இன்னொரு பூதத்தை எனது உலகத்தை ஆளும்படி நியமித்தனர். அந்தப்பாவகாரிகளாகிய காமதையையும் துர்ப்புத்தியையும் கைலாசபதியின் சந்நிதானத்திலே கொண்டுபோய் விட்டனர்.

நான் சிறையிற் கிடந்து அயருறும்போது எனது கணக்கனாகிய சித்திரகுத்தன் இவற்றையெல்லா முணர்ந்து காவற்கடவுளாகிய நாராயண மூர்த்தியிடம்போய் முறையிட்டான்' அந்தப்பண்ணவன் பிரமதேவருடன் கைலையங்கிரிக்குச் சென்று அங்கு எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமானையடைந்து வணங்க, விநாயகத்தெய்வம் அவர்கட்கு இன்னருள் புரிய அவ்விருவரும் வீரபத்திர கணத்தலைவரால் எனக்கு நேர்ந்த இடரை அப்பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்தனர் அப்பொழுது ஐங்கரக்கடவுள் "அரிபிரமரே, அந்த யமன் வீரபத்திரன்கணத்தவரை அவமதித்து எதிர்த்தான். அத்தோஷத்தினாற்றான் அவர்கள் அவனைப் பிடித்துச் சிறையிட்டனர்." என்று கூறியருளுதலும் திருமால், அடியார்க்கு நேரும் விக்கினங்களைத் தீர்த்தருளும் விநாயகத்தெய்வமே, அந்த யமனோ கன்பதவிக்குப் புதியவன்; அவன் அறியாமையாற் செய்த அபராதத்தைத் தமியேன் பொருட்டுத் தேவரீர் பொறுத்தருள்க" என்று மீட்டும் இரந்தனர். அதனைத் திருச்செவி மடுத்த பிள்ளையார் தமது பூதகணத்தலைவனாகிய அசலாக்கனை விளித்து, வீரபத்திர கணத்தவர் கூற்றுவனைச் சக்கரவாளகிரிக் குகை யொன்றுட் சிறையிட்டுள்ளார். நீ ஆங்குச்சென்று அவன் சிறையை நீக்கி எம்முன்னர் இட்டுவருதி" என்று பணித்தருள, உடனே அசலாக்கன் அப்பணி சிரமேற்கொண்டு ஆங்குச்சென்று யமனுடைய சிறையை நீக்கி விக்கினேசுவரன் சந்நிதியிற் கொண்டு வந்து நிறுத்தினன். நான் என் தீவினை ஒழியும் வண்ணம் ஆனைமுகத்து அமலனைப் பத்தியுடன் பணிந்து நிற்க, அப்பெருமான் திருப்புன் முறுவலோடு என்னைப்பார்த்து, யமனே, இந்த இருவருக்குங் கிடைத்த சிவபுண்ணியத்தை நீ அறியாமையினாலேதான் வீரபத்திர கணத்தவரை எதிர்த்து இப்படியான இடருக்கு ஆளாயினை; இவரிடத்துள்ள புண்ணியத்தைச் சொல்லுவேம் கேள்; இக்காமதையென்பவள் வசுமதியென்னும் பிராமணனுடன் இருக்குங்கால் ஒரு ஆண்மகவைப் பயந்து அதனை அநாதக் குழந்தையாக விடுத்துத் துர்ப்புத்தியிடம் மீண்டுவிட, அந்தவசுமதி யென்னும் மறையவனுடைய பத்தினியானவள் அச்சிசுவை எடுத்துத் தன் பிள்ளைபோல் வளர்த்து அதற்குச் சங்கரன் எனப்பெயருமிட்டாள். சங்கரன் என்ற திருநாமம் இவர்கள் குழந்தைக்கு இடப்பட்ட மகத்துவத்தினாற்றான் இவர்கட்கு இம்மேலான கதி கிட்டியது.

யாவ ரேனுமிழிகுலப் பஞ்சமர்
பாவ காரியரேனுமெம் பண்ணவன்
மேவருந் திருநாமமிலேந்து ளோர்
தேவரே யவர்தேவரிற் சீரியோர்.

எவராயினுமாருக, பஞ்சமகுலத்தாராயினுமாருக, பலபாவங்களைச்செய்தவராயினுமாருக, பரமசிவனுக்குரிய திருநாமங்களுள் ஒன்றைப் புனைந்துள்ளவர் தேவரைக்காட்டிலுஞ் சிறந்தவரென்றறிக என்று கூறியருளினர்.

(வரும்)


## அரசாங்க சபைத் தெரிவு!

விளம்பரங்கள்
துண்டுப் பத்திரங்கள் முதலியன
சுவர் விளம்பரங்கள்

அழகாகவும்
துப்பரவாகவும்
பல வர்ண மைகளிலும்

சைவப் பிரகாச யந்திரசாலையில்
அச்சடித்துக் கொடுக்கப்படும்.

சிறந்த வேலை! உத்தரவாதம்!

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

முற்பணமே கட்டவேண்டும்.

மானேஜர்.


விளம்பரம்.

அன்பின் மிக்க சிவநேய அடியார்களே!

தம்பன்கடவை யென்னும் மகாபுண்ணிய பூமியிலே இற்றைக்கு 2000 வருஷங்களுக்கு முன் மகாவலிக் கங்கைக்கரையில் எழுந்தருளித் திருவாடல் கொண்டிருக்கும் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமியின் திருநாட்களில் அடியார்கள் தீர்த்தமாடி, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசியவண் சிலமையப் போதலால், அத்தீர்த்த மாடும் பாகத்திற்குக் கற்படிகள் கருக்கத் தம்பன்கடவைத் தமிழர் ஐக்கிய சங்கத்தாராகிய நாம், எம் சங்க அங்கத்தவர்களினதும் மற்றும் ஊர்ச் சிநேகச் செல்வர்களினதும் உதவிபெற்றுக் குறித்த திருப்பணியை நிறைவேற்ற நிச்சயித்து, எமது சங்கத் தலைவரும், ஞானிகாரியுமாகிய ஸ்ரீமான். வே. தம்பிப்பிள்ளை (Retired Overseer P. W. D. Habarana) அவர்களைப் பணஞ்சேர்க்க நியமித்திருக்கிறோம்.

ஆகையால் இத்திருப்பணி வேலையில் ஈடுபட விரும்பும் அன்பர்களே! தாமனுப்பக் கருதும் பணத்தைக் குறித்த தனாதிகாரியின் பேருக்கனுப்பிவைக்குமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தம்பன்கடவை தமிழர் ஐக்கிய சங்கம்.

(Mis. 229. 12-3-to-3-3422-.)


## மலேரியா மஹாதைலம்.

உங்களுக்கு மலேரியா என வழங்கும் மலைச்சுரந் தணியவேண்டில் இத் தைலத்தை உபயோகியுங்கள். இன்னும் தொய்வு ரோகத்துக்கு இது கைகண்ட தைலம் நூற்றுக்கணக்கானோர் நற்சாட்சிப்பத்திர மளித்துளர். கணைக்கு இன்றியமையாதது. இருமல், தொய்வு, ஈளை, பீநசம், தேக எரிவு, "ஹிஸ்ரியா" வாய்வு இப்படியான ரோகங்களை மாற்றுவதில் வலிமை உள்ளது.

இங்ஙனம்,
போ. சேல்லையா,
ஆயுர்வேத வைத்தியன்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

(Y. 204. 12-2—11-2-35)

தலைவலியுற்றபோது

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

### தைலத்தை

### நெற்றியிலும் கன்னத்திலும்

தேயுங்கள்!

### தலைவலி உடனே மாறிவிடும்.

அதுவுமன்றி இது இந்தியாவில் இந்தியர்களாலே செய்யப்படுவது.

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.

(Y 18. 11-2-33—31-3-34-)

## உலகம் பலவிதம்.

(2ம் பக்கத் தொடர்ச்சி.)

முரு: உசாவவேண்டியதில்லை; நீங்கள் சொன்னது சரிதான். அது கிடக்க, நீங்கள்தான் கவுன்ஸிலுக்குப் போக வேண்டுமென்று ஏன் விரும்புகிறீர்கள்?

முத்: வேறொன்றுக்குமல்ல; மூன்றிக் கவுன்ஸிலைப் பகிஷ்காரஞ் செய்தவர்களை பிரதிநிதிகளாய்ப் போவது அரசினருக்குப் பிடிக்காது; அதனாலேதான் நாங்கள் போகவேண்டுமென்று விரும்புகிறோம்.

முரு: ஏன் அரசினர் அப்படித் தெருவித்திருக்கிறாரா?

முத்: அரசினர் நேரில் தெரிவிக்கவில்லை; ஆனால் நாங்கள்தான் வரவேண்டுமென்று குறிப்பாகத் தெரிவித்திருக்கிறார். அல்லாமலும் பகிஷ்காரக் கட்சியார் போனால் அரசினரோடு ஒத்து உழைக்கமாட்டார்கள். மேலும், நாங்கள் எவ்வளவோ பாடுபட்டு நியமனம் பெற, பகிஷ்காரக் கட்சியார் கவுன்ஸிலுக்குப் போவது, கறையான் புற்றெடுக்கப் பாம்பு அதற்குட் குடிபுகுந்தவிதமாகவல்லவா இருக்கிறது!

முரு: இப்பொழுதுதான் எனக்கு விஷயம் விளங்குகிறது. அதாவது, சிங்களருக்கு மாறாக, தமிழர் கொண்டிருக்கத் கொள்கைக்கு நேர்விரோதமாக, அரசினரோடு ஒத்து உழைப்பதற்கு ஊராவர்களைக்கொண்டு உங்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வித்துக் கவுன்ஸிலுக்குட் போய்ப் புகுதல்தான் உங்களுடைய நோக்கம்.

முத்: ஏறக்குறைய அதுதான் எங்களுடைய நோக்கம். அது பிழையான நோக்கமல்லவென்று நினைக்கிறேன்.

முரு: அதாவது, ஆனைகட்டச் சங்கிலி தானே எடுத்துக்கொடுப்பது போல, சிங்களவரையும் தமிழர்களையும் ஏனைய இலங்கை வாசிகளையும் இன்னமும் அதிகமாகக் கட்டுப்படுத்தி, அடிமைகளாக்குவதற்கு நீங்கள் கவுன்ஸிலுக்குப்போய் அரசினருக்குச் சங்கிலியெடுத்துக் கொடுக்கப் போகிறீர்கள்; இதனைத்தான் தேசத்துரோகம், சனத்துரோகம் என்று சொல்வது. அது கிடக்க, ஊரவர்களுக்கும் கவுன்ஸிலுக்கு உங்களை அனுப்புவதுதான் பிரியம்; நீங்கள் போவதுதான் அரசினருக்கும் பிரியம்; நீங்களே போக வேண்டுமென்றதுதான் உங்களுடைய நோக்கம். இப்படியானால் என்னைப் போன்றவர்களுடைய உதவி தேவையில்லையே? அந்த வாலிபர் சிலரைத் தவிர மற்றை ஊரவர்களெல்லாரும் சேர்ந்து உங்களைத்தானே ஒருமிக்க அனுப்பிவிடுவார்கள்? பகிஷ்காரக் கட்சியார் முயற்சிபண்ணினாலும் அது பலியாதென்றே நினைக்கிறேன்.

முத்: பகிஷ்காரக் கட்சியாருடைய முயற்சி வாய்க்காதென்பது எங்களுக்கு நல்லாய்த் தெரியும்; அதற்காக யோசிக்கவில்லை; எங்களுக்கிடையிலேயே எதிரிடை வந்துவிட்டது; அதைவிட்டுத்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

முரு: உங்களுக்குள் என்ன எதிரிடை?

முத்: எங்களோடு ஒத்துழைத்தவர்கள் இப்பொழுது நான்தான் போகவேண்டும், இல்லை நான்தான் போகவேண்டும் என்று தனித்தனி முற்பட்டுக் கவுன்ஸிலுக்குப் போக முயற்சி செய்கிறார்கள். அதுதான் பெரிய சங்கடமாயிருக்கிறது.

முரு: அப்படியானால் அவர்கள் போகட்டேன், கொள்கையொன்றுதானே; நீங்கள் இந்த முறை மனமொத்துப் போகாமல் அவர்களையே அனுப்பினாலென்ன?

முத்: நான் பிரதிநிதியாக வருவேனென்று அரசினருக்கு வாக்களித்து விட்டேன். அந்த வாக்குத் தவறுவது வடிவல்ல.

முரு: ஒரு முற்றுமில்லாமல் நீங்கள் எப்படி வாக்களிக்கலாம்?

முத்: எல்லாரும் ஒத்தனுப்புவார்களென்றெண்ணிச் சொல்லிவிட்டேன்.

முரு: அப்படியானால், ஐயா சனங்கள் உங்களைத் தெரிந்தனுப்பாவிட்டாலும் நீங்கள் கவுன்ஸிலுக்கு, சொன்ன வாக்குத் தவறாமல் போகவேண்டிய நிலைமையிலே யிருக்கின்றீர்கள்?

முத்: ஆம்; அதையிட்டுத்தான் இப்பொழுது ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

முரு: ஐயா, மெய்யோ, பொய்யோ, நான் அறியேன்; மே மாசத்திலே நியமனம் நான் நியமிக்கப்படாதென்று ஒருகதை பிறக்கிறது; ஆனதால், நியமனசான் நிச்சயமாகக் கிடைக்குமென்பதை அறிந்துகொண்டு முயற்சி செய்யுங்கள். உங்களுடைய ஆசையை நான் ஏன் தடுப்பான; அந்த நேரம் உங்கட்கு உதவி செய்வது என் மனச்சாட்சிக்குச் சம்மதமானால் உதவி செய்வேன். ஆனால் நீங்கள் கொண்டிருக்கும் நோக்கம் துரோகமானது. அதனையிட்டுச் சிந்தித்துத் திருத்தப்பாருங்கள்; நான் போய்வருகிறேன்.

முத்: சரி, போய்வாருங்கள்; பிறகு காண்போம்.

## பின்னிற்க வேண்டாம்!

நமது தாய் நாட்டுச் சோதரர் பூகம்ப அனர்த்தத்தில் அகப்பட்டுக் கஷ்டப் படுவதைப் பற்றி நாடோறும் பத்திரிகைகளிற் படித்தும், அவர்களுக்கு உதவிசெய்ய முன்வரா வேண்டாமா! இறந்த பல்லாயிரக்கணக்கானவர் போக, எஞ்சி யுள்ளோருக்கு ஊண், உடை, இல்லம் என்பனவற்றை அளித்தலில் உதாரத்துவத்திற் சிறந்த தமிழ் மக்களாகிய நாமும் பங்குபற்ற வேண்டாமா? ஆடவர்களே! பெண் மணிகளே, பாலியரே! உங்களுங்களால் இயன்ற தருமத்தை இந்த இந்துசாதனாலயத்திற்கு அனுப்பி வையுங்கள். எச்சிறு தொகையேனும் உவந்தேற்றுக் கொள்ளப்படும். போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

மானேஜர்.

| | ரூ. ச. |
|---|---|
| முன்னர் உபகரிக்கப்பட்டது. | 923 28 |

தொண்டைமானாறுச் சைவாங்கில வித்தியாசாலை.

| | |
|---|---|
| ஸ்ரீ R. கல்லையா | 1 00 |
| N. சரவணமுத்து | 1 00 |
| A. வேலுப்பிள்ளை | 1 00 |
| M. நமசிவாயம் | 2 00 |
| N. வெங்கிடாசலம் | 1 00 |
| மு. செ. வைரமுத்து (கல்முனை) | 2 00 |
| A. மூத்ததம்பிப்பிள்ளை சாவகச்சேரி | 1 00 |
| கா. ஞான், வதிரி, தேவரையாளி வீதி | 2 00 |
| ஸ்ரீமதி W. பொன்னுத்துரை, கன்னாகம் | 2 00 |
| ஆக ரூ. | 936-28 |

### காலநிலை.

நேற்றும் முந்தைநாளும் இன்றும் கடும் வெயில் எறித்தது: ஆனால் இப்பொழுது மழை பெய்கின்றது.

### சுப்பிறீங்கோடு.

தாவடியைச்சேர்ந்த (1) பொன்னுச்சாமி செல்லத்துரை, (2) சின்னத்தம்பி செல்லத்துரை, (3) வேலுப்பிள்ளை பொன்னுத்துரை என்பவர்களில் முதல் இரு எதிரிகளும் வேலுப்பிள்ளை சுவாமிநாதன் என்பவரைக் கொலைசெய்தனர் என்றும், மூவருமாகச் சேர்ந்து வேறு இருவருக்குக் கடுங் காயம் விளைத்தனர் என்றும் யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் குற்றம் சாட்டப்பட்டனர். இன்றைய விசாரணை முடிவில், 1-ம் எதிரிக்கு 3 வருடச் சிறைத்தண்டனை விதித்தார். ஏனைய இரு எதிரிகளும் நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட்டனர்.

### தேகவியோகம்.

யாழ்ப்பாணம் கோட்டடிவாசர் ஸ்ரீ மா. குமாரசுவாமி அவர்கள் சென்ற 9-ம் தேதி தமது இல்லத்திற்றானே தேகவியோகமாயினர். இவர் இறக்கும்போது வயது 72. இவரின் பிரிவால் வருந்தும் சகோதரர் ஸ்ரீ மா. வெற்றிவேலு அவர்களுடனும் புத்திரருள் ஒருவராய அடைவுபிடிக்கும் பிரபலவர்த்தகர் ஸ்ரீ மா. கு தண்டாயுதபாணி அவர்களுடனும் ஏனைய புத்திர, புத்திரிகள் சுற்றமித்திராதியோருடனும் யாமும் அனுதாபமுறுகின்றேம்.

—வண்ணார்பண்ணை செட்டித்தெருவிற் பிரபல ஆயுள்வேத வைத்தியராய் விளங்கிப் பலர்க்கும் நன்மை புரிந்த ஸ்ரீ வை. சபாபதியவர்கள் சென்ற 9ந் தேதி இம் மண்ணுலகவாழ்வை யொருவினர். இவர் இறக்கும்போது வயது 59 மாத்திரமே. இவரைப் பிரிந்து துன்புறும் சுற்றமித்திராதியோருடன் யாமும் அநுதாபப்படுகின்றோம். காலம்சென்ற ஸ்ரீ சபாபதி யவர்களின் மருகர் ஸ்ரீ இ. நா. விநாயகமூர்த்தி L. A. M; A. V. அவர்கள் இப்போது தமது மாதுலனின் வைத்தியத் தொழிலைச் செய்துவருகின்றார்.

—யாழ்ப்பாணம் நகரசங்கத்தின் உபதலைவரும், பிறக்ரதமாகிய ஸ்ரீ க. ஐயாத்துரையவர்களின் தர்மபத்தினியார் ஸ்ரீமதி நாகபூஷணியம்மாள், பிரசவ காலத்தில் ஏற்பட்ட நோய்காரணமாகச் சென்ற செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணம் பிரசவ ஆஸ்பத்திரியில் தேகவியோகமாயினர் என்பதைத் துக்கத்துடன் அறியலானோம். இப்பெண்மணி இறக்கும்போது வயது 33 மாத்திரமே. இவருக்கு இரு ஆண்களும், 3 பெண்களுமாக 5 குழந்தைகள் உண்டு. அகாலத்தில் இவரைப்பிரிந்து துன்புறும் கணவன் புத்திரர் சுற்றமித்திராதியோருடன் யாமும் அநுதாபமுறுகின்றேம்.

# சைவ பரிபாலன சபை.

## அதன் உற்பத்தியும் வளர்ச்சியும்.

(8—3—34-ன் தொடர்ச்சி.)

6. The Social Gathering was held as usual on the 20th of June last the 3rd Anniversary of Her Majesty's Jubilee Celebration; to which were invited beside the members of the Hall, almost all the ELITE of the Native Society of Jaffna; who were entertained with various sorts of innocent amusements and native refreshments, the expenses being born by a special subscription raised among a limited number of the subscribers of the Institution.

7. There were delivered during the year, in the Hall, 6 Lectures.,(1)on "The aims of Education" by Mr. R. Canapathypillai, (2) on "British Philosophy" by the Late Mr. R. O. D. Ashbury, (3) on "India and Ceylon" by Mr. Louis Williams, B. A., Asst. Inspector of Schools, Tanjore, (4) on "Caste" by Mr. Kutton of Travancore, (5) on "Theosophy" by Mr. Kottyah and (6) on "How to elivate our Country" by Mr. M. Skudder.

8. The following newspapers and periodicals 24 in number were available to the members during the year under report. (1) The Ceylon Observer, (2) The Ceylon Times, (3) The Ceylon Independent, (4) The Ceylon Examiner, (5) The Ceylon Government Gazette, (6) The Ceylon Patriot, (7) The Hindu Organ, (8) The Jaffna Catholic Guardian, (9) The Morning Star, (10) The Bombay Gazette, (11) The Hindu, (12) Amirtha Bazaar Patrica, (13) The Bengalle, (14) The Madura Mail, (15) The National Guardian, (16) The weekly edition of the London Times, (17) The Poll Mall Gazette, (18) Illustrated London News, (19) The Nineteenth Century, (20) Chambers Journal, (21) The Buddhist, (22) The Sanmarka Pothini, (23) The War cry, (24) The Sentamil. The above list which can stand very favourable comparision with that of any other Similar Institution here comprises 6 Dailies, 11 Weeklies, 2 Fortnightlies and 5 Monthlies.

9. The Committee in conclusion tender their best thanks to the Hon'ble P. RamaNathan the worthy representative of the Tamils in the Legislative Council for his generous appreciation of and sympathy with the objects of this Institution, which he expressed on the occation of his visit to the Hall on the 12th of September last and for his subsequent presents of the Administration Reports for 1888 and Civil List for 1890."

இது இப்படியிருக்க, இந்துசாதன இங்கிலிஸ் பத்திராசிரியராயிருந்த, தா. செல்லப்பாபிள்ளை 1891 ம் ஆண்டின் ஆரம்பத்தில் தேக ஆரோக்கியக் குறைவினாற் போயும் விலக, ஐந்து மாச காலம் அதற்கென ஒரு பத்திராசிரியர் நியமிக்கப்படாதிருந்தமையால் சிலர் எழுதி உதவிய வியாசங்களைக் கொண்டே இங்கிலிஸ பத்திரிகை நடைபெறலாயிற்று. அப்படி உதவியவர்களில் அ. சபாபதியும் ஒருவராவர். 1891ஆ மாசிமீ 18உ வெளியான "HINDU ORGAN" னில் பத்திராசிரியர் கூற்றாக இருக்கும் வியாசமே அ. சபாபதி எழுதிய முதல் வியாசமாகும்.

சிதம்பரத்திலே ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கும் சிவகாமசுந்தரிஅம்மையாருக்கும் சிற்சபை கனகசபை விமானங்களுக்கும் கரஞு சித்திரைமீ 4உ (15-4-1891) சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நடந்தபோது சிதம்பரத்திலே ஆரிய தர்ம மகாசபை என ஒரு சபை கூடிற்று. இச்சபைக்குத் தக்கிண தேசத்தின் பல பாகங்களிலும் இலங்கையிலுமிருந்து பற்பல சபையாராலும் ஊரவர்களாலும் அனுப்பப்பட்டு அறுபது பிரதிநிதிகள் போயிருந்தார்கள். சைவபரிபாலன சபையார் அ. அருணாசல சாஸ்திரிகள், த. கைலாசபிள்ளை என்னும் இருவரையும் தங்கள் பிரதிநிதிகளாக அங்கு அனுப்பினார்கள்.

"HINDU HIGH SCHOOL" என்னும் இப்பள்ளிக்கூடப் பரீக்ஷை 1891ஆ சித்திரைமீ 1உ முதல் 8உ வரையில் நடந்தது. கரஞு சித்திரைமீ 23உ (5-5-1891) சோமவாரமும் கிருஷ்ணபக்ஷ துவாதசிதிதியும் உத்தரட்டாதி நக்ஷத்திரமும் கூடிய கும்பலக்கின சுபமுகூர்த்தத்திலே இந்து ஹைஸ்கூல் என்னும் இப்பள்ளிக்கூடக் கட்டடத்துக்கு அத்திபாரம் இடப்பெற்றது. அதன் இராசி சக்கரம் அம்ச சக்கரம் இவை:—

| | | | |
|---|---|---|---|
| சந் சுக் | சூரி புத | செவ் ராகு | |
| ல குரு | இராசி சக்கரம் | | |
| | | | சனி |
| | கேது | | |

| | | | |
|---|---|---|---|
| குரு | | ராகு | செவ் |
| | அம்ச சக்கரம் | | |
| | | | சந் புத |
| | ல சுக் கேது | சூரி | சனி |

இக்கட்டடத்தின் நீளம் 154 அடி, அகலம் 84 அடியாகும். இந்த அத்திபாரம் இட்டவர் மேசன் சின்னவி யெனவழங்கும் பேதில்லைநாதராவர். இக்கட்டட வேலை ஆரம்பித்த காலத்தில், கல் (காட்டு) வண்டி ஒன்று 27 சதம்; மணல் வண்டி ஒன்று 23 சதம்; சுண்ணாம்பு லாஸ்தர் ஒன்று (52 புசல்) 4 ரூபா 50 சதம்; முருகை (வரிக்) கல் நூற்றுக்கு 75 சதம்; குழைக்கல் வண்டி ஒன்று 62½ சதம்; நார்க்கடகம் ஒன்று 3 சதம்; இலைக்கயிறு முத்தல் ஒன்று 6 சதம்; கிடுகு நூறு 50 சதம் கிரயமும், மேசனுக்கு நாள் ஒன்றுக்கு 60 சதம்; தச்சு ஒன்றுக்கு 50 சதம்; கல்வெட்டி ஒன்றுக்கு 31½ சதம்; கூலி ஆள் ஒன்றுக்கு 24 சதம் வேதனமும் ஆகும்.

கரஞு வைகாசிமீ 7உ (19-5-1891) கூடிய நிருவாகசபைக் கூட்டத்திலே "ஸ்ரீ ஆ. கதிரவேலு, அ சபாபதிப்பிள்ளை என்னும் இருவரையும் இந்துசாதனப் பத்திரிகைக்கு "இங்கிலிசு எடிற்றர்"களாக நியோகித்துக் கொள்ளுதல் வேண்டும்" என்று ஸ்ரீ சி. நாகலிங்கபிள்ளை பிரேரித்தனர். அது ஸ்ரீ சித. மு பசுபதிச் செட்டியாரால் அநுவதிக்கப்பட்டுச் சர்வசம்மதமாயிற்று.

இந்துகைஸ்கூல் பிள்ளைகளுக்கு 1891ஆ ஆவணிமீ 26உ பரிசு கொடுக்கப்பட்டது. அதைக்குறித்து அவ்வருஷம் புரட்டாதிமீ 2உ வெளியான இந்துசாதனத்தில் இருப்பது இது:- "இந்துஹைஸ்கூலில் சில நாளைக்குமுன்னடந்த பரீக்ஷையிலே சித்திபெற்ற பிள்ளைகளுக்குச் சென்ற புதன்கிழமையிரவு பரிசு கொடுக்கப்பட்டது. அன்று அவ்வித்தியாசாலை மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய எழுநூறு சனங்கள் வந்திருந்தார்கள். அக்கிராசனாதிபதியாயிருந்த ஸ்ரீமான் தா செல்லப்பாபிள்ளையவர்கள் (பி. ஏ, பி. எல்.) கையினாற் பரிசுகள் கொடுக்கப்பட்டன. அதற்குமுன் முதல் உபாத்தியாயர் ஸ்ரீ. அப்பாபிள்ளை வருஷ ஆவேதனம் வாசித்தனர். இவ்வித்தியாசாலையானது இதற்குமுன்னே பெயர்மாத்திரையிற் சைவபரிபானசபையாருடையதென்று இருந்தது. அச்சபையாருடைய அதிபத்தியத்தில் நேரேவந்தது (கலியுகம் ௪௯௯௨) விகிர்திஞு கார்த்திகைமீ முதற்றேதியே.

—(தொடரும்.)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முள்ளி விதை, சாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த, செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைட்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிக்ருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா௨0. அரைருத்தலுக்கு ரூபா௧0. கால்ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞானஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு
(Y 179. 1-1-34 to 31-12-34.) சிலோன்.

## விளம்பரம்.

என்பேரில் உள்ள பின்வரும் கடன் நோட்டுகளும், ரொக்கம் 210 ரூபாவும் கைதடியில் உள்ள எனது வீட்டிலிருந்து (24—2—34) அன்று எனது மகன் அருணாசலத்தால் களவாடப்பட்டிருக்கின்றன:

| நோட்டு எழுதிய தேதி. | தொகை. | எழுதியவர். |
| --- | --- | --- |
| 5—12—28 | 100—00 | சின்னதம்பி முருகேசு |
| 14— 1—30 | 250—00 | முருகேசு தம்பிப்பிள்ளை |
| 2—11—31 | 100—00 | சரவணமுத்து சட்டநாதர் |
| 5—12—31 | 100—00 | சிவலிங்கம் பூதத்தம்பி |
| 21— 8—32 | 70—00 | சின்னப்பொடியன் சின்னப்பனும் பெண் வெள்ளைச்சியும் |

(Mis. 227. 12 & 15-3-34) வே. காசிநாதர். 3-3-34.

## புறுடென்ஷல் வீமாக் கொம்பெனி.

1932-ம் வருஷ ஆதாய நன்கொடை (போனஸ்)

1932-ம் ஆண்டிற்கு முன்பதாகவே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 31/வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின் பேரில் ரூ. 1000-க்கு ரூ. 28/வீதம்

1932-ம் ஆண்டிலேயே முடித்த பூரண ஆயுள் உறுதிகளின் பேரில் ரூ. 1000-க்கு ரூ 23/- வீதம்

தவணை உறுதி (என்டௌமென்ற்) களின்பேரில் ரூ. 1000-க்கு ரூ. 20 வீதம்,

அசைவற்ற காத்திரமான நிதிகளில் பணங்களை மிக ஜாக்கிரதையுடன் சேமித்து வைத்திருப்பதினாலேயே மேற்கூறிய பெரும் நன்கொடைகளை பணமுட்டு நிறைந்த இக்காலத்திலும் கொடுக்க இயன்றது.

வீமாத் திருவதானல்
புறுடென்ஷலில்
செய்து கொள்ளவும்.

உலகத்தில் மிகக் கூடிய தொகையானவர் சேர்ந்திருக்கும் கொம்பனி தற்சமயம் 2 கோடி 75 லட்சம் பேர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

350,00,00,000 ரூபாவுக்கு மேலானதொகை பொறுப்பானது

மேது இலங்கை அரசிறை வருமானத் தொகையைப்போல் ஏறக்குறைய 8மடங்கு வருமானமுடைய மிகப்பெரிய கொம்பனி. நிமிஷமொன்றிற்கு ரூ. 3000/ மேலான வருமானமுளது.

வேண்டிய விபரங்கள் கீழ்க்காணப்படுபவர்களிடத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. இரத்தினசபாபதி,
Asst. Inspector,
Manipay.

க. சொர்ணலிங்கம்,
வடஇலங்கை மேற்பார்வைக் காறன்,
மானிப்பாய்.

Delmege Forsyth & Co. Ltd. Agents.
The Prudential Assurance Co. Ltd Colombo

(Y. 180 1-1-34 to 31-12-34) வி.

## இன்னும் ஒருவாரத்திற்கிடையில்
## இங்கு வரவிருக்கும் "கொக்ரா" என்னும் கப்பலில்
# 100000 குடைமார்க்கு ஓடுகள்

வருகின்றன.

இப்போதே ஆர்டர்கள் கொடுத்தால்,
மலிந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

தற்போது உலவும் ஓடுகளில் இந்த ஓடுகளே சிறந்தன.
பிரதான அம்சங்கள்: தண்ணீர் கசியாது; தூசி அடிக்காது
தண்ணீரை உறுஞ்சாது; விசாலம் பெரிது;
100 சதுர அடி விஸ்தீரணத்திற்கு 118 ஓடுகள் போதுமானவை
விபரங்களை உடனே பின்வருவோரிடம் அறிக.

மெசர்ஸ் செருபிம் பிறதர்ஸ்,
தனி ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Y. 12—7-5-34

## காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

# மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

### மிலிற்றறி, கவர்ன்மென்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மென்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக் கொள்ளும்.

பத்துப் பதக்கம் பரிசுபெற்று, மற்ற எல்லா ஓட்டிலும் பார்க்க, அதிகம் இடத்தை மூடக்கூடிய எங்கள் தங்கமேடல் ஓடுகள் (Secretariat, State Council Chamber) இராசாங்கப் பெரிய கந்தோர்கள், கவுன்சில் மண்டபம் முதலிய கட்டிடங்களுக்குப் பாவிக்கப்பெற்று வருகின்றன.

தலைநகரக் கந்தோர்:-64-ம் நி-ர். ஆதிருப்பள்ளித்தெரு, கொழும்பு.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை:-316-ம் நி-ர். கிட்டங்கித் தெரு, யாழ்ப்பாணம்.

சோமசுந்தர முதலியார் வளவு:-வில்லூன்றி, திருக்கோணமலை.

W. B. S. தர்ம சூரிய:-பெட்டிக்கலவத்தை, காலி.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏசென்றாய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கின்றார்.


Y. 2. 31-3-34.)

வந்துவிட்டன! வந்துவிட்டன!!

குறைந்தவிலை! குறைந்தவிலை!

# பெயர்பெற்ற பவுண்மார்க் ஓடுகள்.

திறமான "பவுண்மார்க்" ஓடுகள் தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வந்திருப்பதால் இன்று தொடக்கம்



(1-3-34) ஏறக்குறைய ஒருவாரம் வரையில் மேற்படி ரேகில் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது.

சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்.
யாழ்ப்பாணம்.
1-3-34.

Phone No. 93.

(Y. 3. 26-4-34).

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறம்ஓங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarpounai, Jaffna on Thursday 15, March 1934.